OFFICE OF THE REGISTRAR OF BOOKS,
REGISTERED
15 NOV 1910
MADRAS.

# பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 1. } 1910௵ நவம்பர்௴ 15௳ / சாதாரண௵ ஐப்பசி௴ 30௳ { பகுதி 7

## வீண்கவலைகொள்வதைத்தவிர்.

—:○o○:—

1. இக்காலத்தின் மனிதர்களின் வாழ்நாள் முழுமையும் கவலையைப்பற்றியதாக நிகழும். சிறு விஷயமாக இருந்தாலும்சரி, பெரு விஷயமாக இருந்தாலும் சரி, இக்காலத்திய மனிதர்கள் வீண் கவலை கொள்ளுகிறார்கள். வீண் மனவருத்தமடைகிறார்கள். அவர்களின் மனோமயகோசத்தை, மனக்கண் விகாசம்பெற்ற ஞானி ஒருவர் அடியில் வருமாறு தாம் கண்டதை விவரித்திருக்கிறார்:— சாதாரணமாக உலகத்தில் அழுந்தியிருக்கும் மனிதனின் மனோமய கோசத்தைப் பார்த்தால், மிக விசனகரமாகவிருக்கும். பலவிதமான கர்மங்களால், கொந்தளிப்புள்ளதாக இருக்கிறது. பல பெரிய அலைகள், அவைகளுக்குள் பலவாறான சிறு அலைகள், இவைகள் உண்டாகியும், மடிந்தும், உண்டாகியும் மடிந்தும் வருகின்றன. ஒரு எரிமலையின் உச்சியில் எத்தன்மையான குழப்பமும் கொந்தளிப்பும் இருக்குமோ அத்தன்மையான குழப்பமும் கொந்தளிப்புமுள்ளதாக இக்காலமனிதனின் மனோநிலை இருக்கிறது. மனோபாவங்களின் மாறுதல்கள்

மனோமய கோசத்தின் திரவியங்களில் பலவர்ணமான வடிவங்கள்க்காணப்படுகின்றன. இவ்வடிவங்கள், பலசுழற்சிகளாகவும், சங்கிலிக்கோவைகளாகவும், வியக்தப்படாத ரூபங்களாகவும், க்ஷணம் க்ஷணம் மாறிமாறிக்கொண்டும் இருக்கின்றன. இவைகளின் வர்ணங்களும், பார்ப்போர் மனத்தைத் துன்பப்படுத்தும் தன்மையனவாக இருக்கின்றன. இவைகளின் வித்தியாசங்களையும், ஓய்வு ஒழிவில்லாமல் அவைகள் மாறிமாறிக்கொண்டு வரும் சுபாவத்தையும், வார்த்தைகளால் விவரிக்கமுடியாது நேரில் பார்த்தால்தான் தெரிய வரும். இவைகளைப்பற்றிய சில சித்திரப்படங்கள், ஸ்ரீமான் லெட்பீடர் என்பார் எழுதியிருக்கும் (Man visible and invisible) என்னும் ஆங்கிலபாஷையில் உள்ள புஸ்தகத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன.

2. கவலைகொண்டவன், மனவருத்தம் கொள்ளுவான். அதனல் தனக்கும் கெடுதி செய்துகொள்ளுவான். பிறருக்கும் கெடுதி செய்வான். தனக்குத்தெரியாமலே, தன்மனோபாவங்களின் அலைகள் சமீபத்திலிருப்பவரான பிறர் மனத்தைத் தாக்கும். இன்ன காரணமென்று அறியாமல், இவர் மனம் சஞ்சலிக்கும், வருத்தமுறும். பிறர்மனம் வருத்தமுறும்படி செய்வதனல், பாவ கர்மத்தை உண்டு பண்ணுகிறுன். அதனல், ஒருவன் வீணன மனக்கவலை கொள்வதில், தனக்குக் கெடுதியையும், பிறருக்குப் பாபகர்மத்தையும் செய்தவனுகிறுன். உலக ஜீவனம் செய்வதில், பல உத்தியோகங்கள், தொழில்கள், இவைகளை நடத்துவதில் கவலைகள், மனவருத்தங்கள் உண்டாகின்றன. இவைகளைத் தவிர, அநாவசியமாக நாமே வீண் கவலையை உண்டுபண்ணிக் கொள்ளுகிறேம். அவன்நம்மைப்பற்றி என்ன எண்ணங்கொண்டிருக்கிறுனே? அதனல் என்ன துன்பம் செய்வானே? நாளைக்கு என்ன நேரிடுமோ? இவ்விதமாக பலவாறுக நம்மைக் கிலேசப்படுத்திக்கொள்ளுகிறேம். காமக்குரோத லோப மோக, மதமாச்சரியம், ஈரிஷை, டம்பம், அகங்காரம் முதலியவைகள் நம்மை அடிமைபாக்கி பலவிதமாக நம்மை அங்குமிங்கும் அலைப்பித்துத் தத்தளிக்கும்படி செய்கின்றனவே! மனச் சஞ்சலத்தைப் பற்றி கீதையில் அர்ச்சுனன் சொல்லுகிற பேர்போன வாக்கியம் யாருக்கும் தெரியுமே. “சஞ்சலம் ஹிமநக் கிருஷ்ண!”

3. இச்சஞ்சலத்திற்கெல்லாம் காரணம் ஆசை. ஆசை விட்டால், எல்லாம் ஒழியும். மனம்நேர்மைபெறும்; மனச்சமாதானமடைவோம். மனச்சமாதானமே, சுகிர்தம்பயக்கும். அதனால் சந்தோஷம் பெறுவோம். இதனால் தான் திருமூலர் அடியில் வருமாறு உபதேசிக்கிறார்.

"ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்
ஈசனோ டாயினும் ஆசை அறுமின்கள்
ஆசை படப்பட ஆய்வரும் துன்பங்கள்
ஆசை விடவிட ஆநந்தமாமே."

எந்தெந்த வஸ்துவில் நாம் அவாக்கொள்ளுகிறோமோ, அந்தந்த வஸ்துவை வேண்டாது ஒழிப்பின், அதினால் வரும் துன்பம் இன்றாம்.

"யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்"—குறள்.

4. ஆத்மா ஒன்றே நிலைத்தவஸ்து என்றும், மற்றவை நசுரமானவை என்றும் அறியவேண்டும். அப்படி அறியாமையே இவ்வாசைக்குக் காரணமாம். சந்தோஷத்தைத்தான் யாவரும் விரும்புவர். ஆனால் அச்சந்தோஷத்தின் தத்துவத்தை அறியமுயலுகிறாரில்லை. சந்தோஷம் என்பது ஒரு வஸ்துவன்று. அது நம்மிடமா, விஷயத்தினிடமா என்று ஆராயவேண்டும். விஷயத்தினிடமாக இருப்பின், ஒரு விஷயத்தை நாடி நாம் செல்ல, அவ்விஷயம் கிடைத்தமாத்திரத்தில், சந்தோஷம் என்றும் உளதாக இருக்கவில்லையே! உதாரணமாக, மாம்பழம் வேண்டுமென்று ஆசை உண்டாக, அதனால் மனச்சலநம் உண்டாகிறது. அதை அடைய பல முயற்சிகள் செய்கின்றோம். கடைமுறையில் மாம்பழம் கிடைக்கிறது. கையில் கண்டோம், மனச்சஞ்சலம் ஒய்வு பெறுகிறது. மனத்தின் அலை ஒய்தலிலே சந்தோஷம் உண்டாகிறது. அதாவது, மநத்தின் அலை ஒய்ந்து மநம் சாந்தம் பெறவே, அதில் ஈசுவர ஸ்வரூபமான ஆநந்தம் பிரதிபிம்பிக்கிறது. அதுவே ஆநந்தம் அனுபவித்தலாகும். இச்சஞ்சலமின்மை நீடித்திருக்குமாகில், சந்தோஷமும்

தீர்க்ககாலம் நிகழும். அப்படி இராமல் மாம்பழ ஆசையினால், உண்டான மனக்கொந்தளிப்பு அடங்கி, பின்னர் பலாப்பழம் வேண்டுமென்ற வேறு ஒரு அலை மனத்தின்கண் கிளம்புகிறது. இதை அடைய வேறு முயற்சிகள் ஏற்படுகின்றன. இது கிடைத்த உடனே அலைகள்ஒடுங்குகின்றன, சந்தோஷம்உண்டாகி க்ஷணிகம் தங்குகிறது. இவ்விதமே, ஆசையால் மனசில் அலைக்குப்பின் அலைகள் உண்டாகவே, அதன் கண் கொந்தளிப்பு உண்டாகிறது. கொந்தளிப்பு அடங்கவே, மனம் சமாதானம் பெறுகிறது. சந்தோஷம் ஜனிக்கிறது. சந்தோஷம் ஒரு வஸ்துவன்று, ஒரு தர்மம். ஆத்மாவின் ஓர் ஸ்வரூபம். ஆசை என்ற அலையால் மனத்தின்கண் கொந்தளிப்பு ஏற்படவே, ஸ்வரூபத்தை அறியமுடியவில்லை. அலை ஓயவே, சஞ்சலமின்றியுள்ள மனத்தில் ஆநந்த ரூபமான ஆன்மா பிரகாசிக்கிறுன். சஞ்சலம் ஒய்ந்த இடமே, சுகிர்தமுள்ள ஸ்தானம். இதனுல்தான், தைத்திரிய உபநிஷத்தில் ஆநந்த மீமாம்சையில், அதாவது ஆநந்தத்தைப் பற்றிய ஆராய்ச்சி முறையில், ஆசையற்ற நிலையே ஆநந்தநிலை என்று சித்தாந்தம் ஏற்படுகிறது. காமமற்றவனுகவும் ஞான சம்பன்னனுகவும் உள்ளவனுடைய ஆநந்தம்தான் பிரஹ்மாநந்தம். மற்றவை விஷயாநந்தங்களாம். அவை எல்லாம் அப்பிரம்மாநந்தத்தின் சிறுதிவலைகளாம். பலபடிகளில் உள்ளவைகளாக இருக்கின்றன. பேர்ஆநந்தம் அகண்டமான சமுத்திரம், மற்ற ஆநந்தங்கள், அச்சமுத்திரத்திலிருந்துமொண்ட சிறு சிறு பாத்திரங்களின் அளவையுள்ளவைகளாம். இதையே, ஸ்ரீமத் சங்கராசாரியார் அவர்கள் அடியில்வருமாறு மநீஷா பஞ்சகம் என்ற நூலில் உபதேசித்திருக்கிறுர்.

𑌯𑌤𑍍𑌸𑍌𑌖𑍍𑌯𑌾𑌮𑍍𑌬𑍁𑌧𑌿𑌲𑍇𑌶𑌲𑍇𑌶𑌤 𑌇𑌮𑍇 𑌶𑌕𑍍𑌰𑌾𑌦𑌯𑍋 𑌨𑌿𑌰𑍍𑌵𑍃-
𑌤𑌾 𑌯𑌚𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑍇 𑌨𑌿𑌤𑌰𑌾𑌂 𑌪𑍍𑌰𑌶𑌾𑌨𑍍𑌤𑌕𑌲𑌨𑍇 𑌲𑌬𑍍𑌧𑍍𑌵𑌾 𑌮𑍁𑌨𑌿𑌰𑍍𑌨𑌿𑌰𑍍𑌵𑍃𑌤𑌃 ।

𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑌿𑌤𑍍𑌯𑌸𑍁𑌖𑌾𑌮𑍍𑌬𑍁𑌧𑍌 𑌗𑌲𑌿𑌤𑌧𑍀𑌰𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵 𑌨 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮-
𑌵𑌿𑌦𑍍𑌯𑌃 𑌕𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌸 𑌸𑍁𑌰𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌵𑌨𑍍𑌦𑌿𑌤𑌪𑌦𑍋 𑌨𑍂𑌨𑌂 𑌮𑌨𑍀𑌷𑌾 𑌮𑌮 ॥ ।।।.

இதன் பொருள் :—எந்த பரமாத்மாவின் ஆநந்தத்தின் திவலையினுடைய திவலையினுல், இந்திரன் முதலானவர்கள் சுகத்தை அனு

பவிக்கிறார்களோ, எந்த பரமாத்மாவை மிகவும் அடங்கிய மனத்தினால், முனியானவன் அறிந்து சுகத்தை அனுபவிக்கிறானோ, ஆநந்தரூபமான அந்த வஸ்துவினிடத்தில், எந்த ஞானி தன் புத்தி நழுவவே, பிரஹ்மமாக ஆகிறானோ, அவன் பிரஹ்மமே; பிரஹ்ம வித் அல்லன். அவனுடைய பாதத்தில் பிரஹ்மாதி தேவர்கள் நமஸ்கரிக்கிறார்கள். இது என்னுடைய தீர்மானம்.

விஷயாநந்தமாக இருந்தாலும் சரி, பிரஹ்மாநந்தமாக இருந்தாலும் சரி, உண்மையில் அவை இரண்டும், மனத்தின் அலைஓய்ந்த போழ்து, உண்டாகும். முன்னது சொற்பகாலம் உள்ளது. பின்னது தீர்க்க காலம் உள்ளது. அறவுள்ளார் தீர்க்ககால முள்ளதைத்தான் நாடுவர். அதைஅடையவே, வேண்டும் முயற்சிகள் தேடுவர், அம்முயற்சிகளே, கர்மயோகம், பக்தியோகம், ஞானயோகம்எனவழங்குகின்றன. தம்முடைய சுபாவத்திற்கும் தகைமைக்கும் உகை சௌகரியத்துக்கும் ஏற்ப, இம்முறைகளில் யாதேனும் ஒன்றைக்கடைப் பிடியாகப் பிடித்து அதில்பயின்று அதன்பலனாய் மனச்சஞ்சலத்தைத் தவிர்ப்பாய், ஈசுவர சாக்ஷாத்காரத்தைப் பெறுவாய்.

சிவராம சுப்பிரமணியன்.

---

## நன்மொழி.

29. உயர்நலம் பெறவேண்டி முயல்வான், ஒருகாலும் தவறான். அன்பு அமைந்த நெஞ்சினர், ஒருகாலும் துன்பமடையார்.

30. நல்ல எண்ணங்களையே எப்போதும் சிந்திப்பாய், சுகிர்தம் பயக்கும் சிந்தனைகளையே எப்போதும் கருதுவாய். மேல்நோக்கும் கருத்துகளையும் எப்போதும் எண்ணுவாய். தீய எண்ணங்கள் தாமே மடிந்துபோம்.

31. தூய்மைப்படுத்துமவைகளில், ஞானத்திற்கு சமமானது வேறு ஒன்றில்லை. அதனால், எவ்விதத்தானும் ஞானம்பெற முயலு ஞானம் முள்ளவனே சுகியாவான்.

## தர்மசத்திரங்களும் அவைகளின் தர்க்கால பிரயோஜனங்களும் அவைகளைச் சீர்திருத்தும் முறையும்.

———]✳[———

1. நம் தேசத்தில் ஆதிகாலமுதல் அதிதி பூஜையானது எப்போதும் வழங்கிவருகின்றது. "அதிதிதேவோ பவ" என்ற உபதேசம் தைத்திரேய உபநிஷத்திற்கூறப்பட்டுள்ளது. அதிதி என்றால் விருந்தினர். அவரைத் தேவராக ஆராதிக்கவேண்டுவது, இல்லறத்தோன் பூண்ட கடமையாம். "அதிதிர் துரோணஸத்" என்பது கட உபநிஷத்தில் உள்ள மந்திரம். கிருகத்தில் ஈசுவரன் அதிதி ஸ்வரூபமாக இருக்கிறான் என்பது இதன்பொருள். ஆதியில் அதிதி என்ற சொல் ஒரு திதி, அதாவது 60 நாழிகைக்குமேல் ஒரு கிருகத்தில் தங்காத உத்தமப் பிராமணனைக் குறிப்பித்தது. அதிதியை உபசரித்தல் பஞ்சயக்ஞத்தில் ஒன்றாகக் கருதப்பட்டுள்ளது. இதனை ஒவ்வொரு பிராமணனும் அநுஷ்டிக்கவேண்டும். இந்த யக்ஞத்துக்குப் பிரஹ்ம ஹுதா என்று பெயர். அதன் பொருள் பிராஹ்மணனை விருந்தினரின் வைசுவாநரன் என்று சொல்லப்பட்ட அக்கினியில் ஹோமம் செய்தல் என்பதாம். இக்கருத்தைக்கொண்டே ஸ்ரீ கிருஷ்ணபகவான் கீதையின் 15-வது அத்தியாயம் 14-வது சுலோகத்தில் கூறுகிறதாவது:—

"அஹம் வைச்வாநரோ பூத்வா ப்ராணிநாம் தேஹமாச்ரித:
ப்ராணாபாநஸமாயுக்த: பசாம்யந்நம் சதுர்விதம்."

(இ - ள்). வைசுவாநரஸ்ரூபியாகப் பிராணிகளின் சரீரங்களில் இருந்துகொண்டு நான்குவிதமான உணவுகளை உண்கிறேன்.

"எவ்வுயிரும் பராபரன் சந்நிதிய தாகும். இலங்கும் உடலுயிர் அனைத்தும் ஈசன் கோவில்". "ஈசனெனக் கருதி எல்லா உயிர்களையும் நேசத்தால் நினைந்துகொள்". இவைபோன்ற வசனங்கள் அதிதிபூஜையின் தத்துவத்தை உணர்த்துகின்றன. ஆனால் முற்கூறியவண்ணம் அதிதி என்றால் 60 நாழிகைக்குத் தங்குகிறவர்களை மாத்திரம் குறிக்கும். ஓர் ஊரில் நிலையாயிருக்கிறவனையாவது, அந்

நிய கிருகத்தில் வழக்கமாய் உண்பவனையாவது குறிக்கமாட்டாது. ஈசுவர பக்தி இல்லாதவன், வேதநம்பிக்கையில்லாதவன், பேராசை கொண்டவன், பொய்யன், திருடன், கபடமுள்ளவன், பிறரை நிந்திக்கின்றவன் இவர்கள் போன்றவர்கள் அதிதிகளாகமாட்டார்கள். மனுஸ்மிருதி, 3, 4, 6, அத்தியாயங்களில் இவ்விஷயத்தைப் பரக்கக்காணலாம்.

2. வைசுவதேவம் ஆனபிறகு எவனுயிருந்தாலும் சரி "அன்னமிடுமின்" என்றார் பராசரரும். இக்கருத்துக்கொண்டே திருமூலரும்:—

"ஆர்க்கு மிடுமின், அவர்இவர் என்னன்மின்,
பாத்திருந்து உண்மின், பழம்பொருள் போற்றன்மின்,
வேட்கை யுடையீர் விரைந்து ஒல்லை உண்ணன்மின்,
காக்கை கரைந்துண்ணுங் காலம் அறிமினே".

ஒவ்வொரு பிராமணனும் இஷ்டம், பூர்த்தம் என்ற இருவிதமான கைங்கரியங்களைச் செய்தல்வேண்டும். இஷ்டி அல்லது இஷ்டம் என்றால் யாகாதி யஞ்ஞங்கள். பூர்த்தம் என்றால் குளம்வெட்டுதல், சத்திரம் கட்டுதல், தண்ணீர்ப்பந்தல் வைத்தல் முதலியனவாம். பூர்த்தத்தை எந்த ஜாதியாரும் செய்யலாம். முற்காலத்தில் ஜனங்கள் தூரதேச யாத்திரை செய்தல் மிகவும் துர்லபம். அக்கினிஹோத்திர ஔபாசனாதிகளும், யாகாதி கிருத்தியங்களும் மிகவும் ஆராதிக்கப்பெற்றன. புண்ணிய தீர்த்தங்களின் மகிமையும், மகருஷிகள் வசிக்கும் க்ஷேத்திரங்களும் யாத்திரை செய்யும்படியாக ஜனங்களைத் தூண்டின. பின்னர் ஈசுவர அவதாரம், ஈசுவர லீலைகள் ஏற்பட க்ஷேத்திரங்களும் அவ்விஷயங்களை நிதர்சனமாக விளக்கிக்காட்ட மூர்த்திகளும் அம்மூர்த்திகளுக்கு ஆலயங்களும் ஏற்பட்டன. இவ்விதமாகக் காசிமுதல் கன்னியாகுமரி வரை தீர்த்தங்களும் க்ஷேத்திரங்களும் ஆயிரக்கணக்காக ஏற்பட்டன. இவைகளுக்கு ஜனங்கள் யாத்திரை போகத் தலைப்பட்டார்கள். அவர்கள் போகும் பாதைகள் காடுகளின் வழியாகச் சென்றன. வழியில் கள்ளர்பயம், மிருகபயம் அதிகமாகஇருந்தபடியால் ஜனங்கள் தனித்துப்போகாமல் கூட்டங்கூட்டமாய் யாத்திரை செய்துவந்தனர். இவ்வாறான யாத்

திரைக் கூட்டங்கள் சௌகரியமாகத் தங்குவதற்கு ஆங்காங்குள்ள கிராமங்களின் கிருகங்கள் போதாமையாக இருந்தன. இந்த அசௌகரியத்தை உத்தேசித்து, யாத்திரை போகிறவர்களுக்கு உதவிபுரிதல் பெரும் புண்ணியமெனக் கருதி, மார்க்கங்களில் தங்குவதற்காக, காதவழி தூரத்துக்கு இடையில் நீர்வளம் பொருந்திய இடங்களில் அரசர்களும், பிரபுக்களும், தனவான்களும் சத்திரஞ் சாவடிகள் ஏற்படுத்தினர்கள். அவைகளிற் சிலவற்றில் அன்னபானுதிகளும் கொடுத்து உதவப்பட்டன. முக்கியமாய்ப் பிராமணர்களுக்கு மட்டும் பல இடங்களில் கொடுக்கப்பெற்று வந்தன. பிராமணர்கள் தபசினுலும், சிலத்தினுலும், வித்தையினுலும் எல்லோராலும் கொண்டாடப் பெற்ருர்கள். அன்னவர்கள் அதிகமாக யாத்திரைசெய்து வந்தார்கள். பின்னர் ஏனைச் சாதியாருக்கும் அன்னபானுதிகள் கொடுக்கப்பட்டன.

3, இவ்விதம் ஏற்பட்ட பாதைகள் ஆதியில் வண்டிப்பாதைகளாக இல்லை. பல்லக்கு, குதிரை, மாடு, டோலி முதலியமட்டும் செல்லக்கூடிய கால்நடைப்பாதைகளாக இருந்தன. பின்னர், முக்கியமான க்ஷேத்திரங்களுக்கும் தீர்த்தங்களுக்கும் வண்டிப்பாதைகள் ஏற்பட்டன. யாத்திரைக்காரர்கள் தவிர, அப்பாதைகள்வழியாய் வியாபாரிகளும் செல்வாராயினர். க்ஷேத்திரங்களில் உற்சவங்கள் ஏற்படவே வியாபாரங்கள் பலப்பட்டன. இவற்றின் மூலமாய்ச் சிறு கிராமங்களாகவும் சிற்றூர்களாகவுமிருந்த க்ஷேத்திரங்கள் பெரிய பட்டணங்களாகவும் நகரங்களாகவும் விருத்தியாகத் தொடங்கின. இவைகளில் முன்னேற்படுத்தப்பட்ட சத்திரங்களும் வரவர விருத்தியடைந்தன. முக்கியமாய் நம் பரதகண்டத்தின் நேத்திரங்கள் என்று கூறத்தக்க காசி, இராமேசுவரம் என்ற இரண்டு பெரும் க்ஷேத்திரங்களுக்குச் செல்லும்படியான பாதைகளிலும் சத்திரங்கள் மிகவும் அபிவிருத்தியாயின. இத்திவ்விய க்ஷேத்திரங்களின் மத்தியில் முக்கியமான பல க்ஷேத்திரங்களும் தீர்த்தங்களும் வியாபித்திருக்கின்றன. இத்திவ்விய தேசங்களில் ஒன்றினின்றும் மற்ருென்றுக்கு ஒருவர்போகுங்கால், அவற்றின் நடுவிலுள்ள முக்கிய க்ஷேத்திரங்களைத் தரிசனம் பண்ணுமல் விட்டு விலகுதல் இயலாத காரியம். ஆங்

OFFICE OF THE ... BOOKS, REGISTERED 15 NOV 1910 MADRAS.

கில அரசாங்கத்தார் நம் நாட்டையாளத் தொடங்கியபின் முன்னிருந்த பாதைகள் பலப்பட்டன. வியாபாரமும் ஜன சங்கமும் பெருகிய துறைமுகம் முதலிய இடங்களுக்குப் புதிதான ரஸ்தாக்கள் ஏற்பட்டன. தற்காலம் அந்தந்த ஜில்லாவிலுள்ள ஜில்லாபோர்டு, தாலூகா போர்டார்களால் கிராமங்களுக்கும் ரஸ்தாக்கள் ஏற்பட்டு வருகின்றன. நாளிடையில் நம் நாடு முழுவதும் வலைப்பின்னல் போல் ரஸ்தாக்கள் ஏற்பட்டுவிட்டன.

4. இந்நாளில் இருப்பதுபோல் முற்காலத்தில் வியாபாரங்கள் விஸ்தாரமாக நடைபெறவில்லை. சாமான்யப் பட்டணங்களிற்கூட எல்லாச் சாமான்களும் கிடைக்கக்கூடிய கடைகள் அதிகமாகக்கிடையா. சாப்பாட்டிற்கு வேண்டும் சாமான்கள் கிராமங்களில் விலைக்குக் கிடைக்கமாட்டா. இக்காரணங்களால் சத்திரங்கள் அவசியம் இருக்கவேண்டியவைகளாக ஏற்பட்டன. அன்னபானாதிகள் இனமாகக் கொடுக்கவேண்டியதாகவும் நேர்ந்தது. இக்காலத்திலோ எல்லா முக்கிய க்ஷேத்திரங்களுக்கும், தீர்த்தங்களுக்கும் ரயில் பாதைகள் ஏற்பட்டிருக்கின்றன. உணவுக்குரிய சாமான்கள் எல்லாம் விலைக்குச் சுலபமாய்க் கிடைக்கின்றன. பல இடங்களில் உணவுக்கு வேண்டிய சாமான்கள் பக்குவப்படுத்தப்பட்டு இரவும் பகலும் தயாராய் விற்கப்படுகின்றன. சௌகரியமான கிளப்புகள், காப்பிக்கடைகள் எங்கும் ஏற்பட்டுவிட்டன. ஆகையால் மேற்கூறப்பட்ட சத்திரங்கள் இக்காலத்தில் எம்மாத்திரம் பயன்படுகின்றனவென்பதை விசாரிப்போம். இராமேசுவரத்துக்குப் போகும் பாதையிலுள்ள சத்திரங்கள் ரயில் ஏற்பட்டுவிட்டபடியால், பெரும்பாலும் உபயோகப்படாமல் அடைபட்டுப்போயின. அதனாலேயே பழைய வண்டி ரஸ்தாக்களும் முன்போலப் பயனில்லாமற்போயின.

5. முற்காலத்தினும் இக்காலத்தில் ஜனங்கள் அதிகமாக க்ஷேத்திர யாத்திரை செய்யினும், அவர்கள் செய்யும் யாத்திரை விரைவாகவே நடைபெறும்பொருட்டு சிறு க்ஷேத்திரங்களுக்கு யாத்திரைக்காரர்கள் அநேகமாய்ப்போகிறதில்லை. ஆகையால் சிறுகிராமங்களிலுள்ள சத்திரங்களின் அன்னபானாதிகளை நிறுத்திவிடுதல் மிகவும் நலமாம். அவை ஏற்பட்ட நோக்கங்களை நிறுத்தச் சட்டங்

கள் இடங்கொடா. அச்சட்டங்களை மாற்றல் இன்றியமையா தது. ஆகையால் பெரிய உற்சவங்களில் மட்டும் அவ்வேற்பாட்டைக் கைக்கொண்டு மற்றைக்காலங்களில் செய்யும் செலவுகளை மீதப்படுத்திப் பெரிய க்ஷேத்திரங்களிலும், ஜனசமூகங்கள் கூடுகின்ற முக்கியமான நகரங்களிலும், ஜனவாசத்துக்காக அதிக சத்திரங்கள் ஏற்படவேண்டுவது மிகவும் முக்கியமானது. உதாரணமாக முற்காலத்தில் சோழவந்தான் என்னும் கிராமமானது இராமேசுவர யாத்திரைக்காரர்கள் தங்கும் இடமாக இருந்தது. ரயில் ஏற்பட்டபின் அதிலுள்ள இரண்டு பெரிய சத்திரங்களும் அவ்விஷயத்திற்குப் பயன்படாமற்போயின. அவைகளுக்கு மூவாயிரம் நாலாயிரம்ரூபாய் வருஷவரும்படி ஏற்பட்டிருக்கின்றது. அச்சத்திரங்கள் இதுகாறும் மதுரைத் தாலூகா போர்டு விசாரணைக்குள்ளிருந்தது. தாலூகா போர்டார் அதன்ஆவேஜிலிருந்து அச்சத்திரங்களுக்கு அவசியமான பொருளைச் செலவுசெய்து மீதத்தொகையைக்கொண்டு மதுரை ரயில்வேஸ்டேஷனுக்குச் சமீபத்தில் இரண்டு பெரிய கட்டிடங்கள் இராமேசுவர யாத்திரைக்காரர்களின் சௌகரியத்துக்காகக் கட்டியிருக்கிறார்கள்.

6. இவ்வாறே இராமநாதபுரம், சிவகங்கை ஜமீந்தார்களின் சத்திரங்களில் அநேகம் ரயில் ஏற்பட்டதன்மேல் உபயோகமில்லாமற்போயின. ஏனைய ஜில்லாக்களிலும் பல இடங்களில் இவ்வாறே சத்திரங்கள் உபயோகமில்லாமற்போயினவாகவே நினைத்தல்வேண்டும். முன்னிருந்ததைவிட எத்தனையோ விதமாக நம் தேசத்தில் பல மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவ்வேறுபாடுகளுக்குத் தக்கவண்ணம் யாத்திரைகள் தங்குவதற்கும், உற்சவ காலங்களில் ஜனங்கள் தங்குவதற்கும், ஜல வசதியுடனே நானு வர்ணத்தாருக்கும் வெவ்வேறாகக் கட்டிடங்கள் கட்டவேண்டுவது இன்றியமையாதது. அங்கவீனர்களுக்கும், பரம ஏழைகளுக்கும், தள்ளாக் கிழவர் முதலியோருக்குமட்டும் அன்னபானாதிகள் கொடுத்து மீதத் தொகையைக்கொண்டு ஆயுர்வேத வைத்தியசாலைகள் அவ்விடங்களுக்குச் சமீபத்திலேயே அமைத்து உதவவேண்டும். இஃதோர் பெரும் புண்ணியம். பின்னும் மீதமிருக்குமானல் ஊருக்குத் தக்கபடி வித்தியாசாலைகள் ஏற்படுத்தலாம்.

7. இவை நிற்க. தேவகோட்டை கானாடுகாத்தான் முதலிய நாட்டுக்கோட்டைச்செட்டிக் கிராமங்களில் ஏற்பட்டிருக்கும் சத்திரங்களிலும் இவ்வாறே செய்யலாம். தர்மம் செய்வதில் "பாத்திரம் அறிந்து பிச்சையிடு" என்ற நீதியைக் கைக்கொண்டு செய்தல் நலம். சோம்பேறிகளுக்கும், வீணர்களுக்கும், சூதாடிகளுக்கும், பகிரங்கவியபிசாரம் செய்பவருக்கும் அந்தத்தர்மங்களின்சொத்துச்சேராமற்காத்துக்கொள்வது தர்மம் ஏற்படுத்துபவர்களது கடமையாம். செட்டிகள் மேற்படிசத்திரங்களில், இன்றியமையாதஏழைகளுக்கும் வியாதியஸ்தர்களுக்கும்அன்னபானாதிகள் கொடுத்து, ஏனையதிரவியத்தைக்கொண்டு கைத்தொழிற்சாலைகளையும், பள்ளிக்கூடங்களையும் ஏற்படுத்தி நாட்டின் அறிவையும் செல்வத்தையும் அபிவிருத்திபண்ணலாம். வித்தியாசாலைகளிலேயே அவரவருக்கு ஏற்ற தொழில்களைக் கற்பித்துக்கொடுக்கலாம். அவ்வாறு செய்யும்பக்ஷத்தில், நாட்டுக்கு மிகவும் நன்மையுண்டு. தர்மம்செய்பவர்களுக்கும் நீடித்த சுகிர்தம் உண்டு. என்றென்றைக்கும், ஒருவனுக்கு காலக்ஷேபத்துக்கு வழிதேடிக்கொடுத்தால், அவன் என்றும் மறவா நன்றிசெலுத்துவான். அவன் குடும்பத்தையே ரட்சித்தபாதிரியாகும். சுலபத்தில் பல குடும்பப்பிரதிஷ்டைகள் செய்த புண்ணியத்தைப் பெறலாம் அன்னதானம் விசேஷமானாலும் அதனினும் வித்தியாதானம் மேலானது என்றால் அதனைச்செய்யப் பின்வாங்கலாமா? அன்னதானம் செய்யும்பக்ஷத்தில் சாப்பிடுகிறவனுக்குநிமிஷம் ஜீர்ணமாய்விடுகிறது. வித்தையோ நீடூழி நிலைநின்று எத்தனையோபேருடைய பசியை நீக்கக்காரணமாகிறது. ஆகையால் செட்டிப்பிள்ளைகளும் மற்றைய தர்மிஷ்டர்களும் சத்திரதர்மங்களைப்பிரயோஜனமின்றிச்செய்யாமல் அவைகளை வேண்டிய அளவு நடத்தி வேறு தர்மங்களாகிய பாடசாலைகள், வைத்தியசாலைகள், கைத்தொழிற்சாலைகள் முதலியவற்றை ஏற்படுத்தி புண்ணியத்தைக் கட்டிக்கொள்வார்களென்று நம்புகிறோம்.

8. "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே" என்ற நியாயத்தால் மேற்கூறிய தர்மங்களும் சிறந்தனவே. அவைகளையும் பழைய தர்மங்களோடு சேர்த்துச் செய்து

புண்ணியங்களைப் பெருகச்செய்யலாம். சத்திரங்கள் ஆதியில் நம் முன்னோர்கள் ஓர் எண்ணத்துடன் ஏற்படுத்தியிருந்தாலும், அந்தத் தர்மங்களை காலதேசவர்த்தமானங்களை ஒட்டிச்சீர்திருத்தி அவற்றை ஏற்படுத்தியவர்களுக்கு அதிகபுண்ணியம் கிடைக்கும்படியான ஏற்பாட்டைச் செய்வதே, அவைகளைத் தற்காலம் பரிபாலிப்பவர் கடமையாகும். தர்மம் தர்மமாகவே இருக்கவேண்டுவது அவசியமே ஒழிய, அதன் முதன் நோக்கம் பயன்படாமற் போகுங்கால், அதனை ஒட்டி வேறு சிலதர்மங்களையும் சேர்த்தல் புண்ணியமேயாகும். பழைய விலையுயர்ந்த நகை குடும்பத்திலிருந்துவந்தால் அதனை இக்காலத்தில் உபயோகப்படுத்துவதற்கு இயலாமற் போய்விடின், வேறு நகைகளாக மாற்றாமல் அவ்வாறே வைத்திருப்போரும் உண்டோ? காலத்தையும் பயனையும் அநுசரித்து மாற்றுவதுபோல தர்மவிஷயங்களிலும் காலத்துக்குத்தக்க மாறுதல் செய்து அத்தர்மங்களைப் பயன்பெறச் செய்வதே சிறந்ததாகும்.

9. "வறியார்க்கொன் றீவதே ஈகை" என்றார் திருவள்ளுவநாயனார். வறியவருள்ளும் நல்லொழுக்கமுடையோர்க்கு ஈவதே பெரும் புண்ணியமாம்.

> "கோல வறட்டைக் குனிந்து குளகிட்டுப்
> பாலைக் கறந்து பருகுவ தேஒக்கும்
> சீலமும் நோன்பும் இலாத வர்க்கு ஈந்தது
> காலம் கழிந்த பயிரதுவாகுமே.—திருந்திரம்."

10. இக்காலத்தில் நம் நாட்டில் பலர் ஏழைகளாக இருக்கிறார்கள். அவர்களுக்கு என்றும் பயன்படக்கூடிய கைத்தொழில்கற்பிப்பது பெரும் புண்ணியமாகும். தொழிலில்லாமல் பலர் சோம்பேறிகளாகத் திரிகின்றனர். அவர்களால் நாட்டுக்குப் பலகேடுகள் உண்டாகும். பத்துப்பன்னிரண்டு வருஷங்களுக்கு ஒருமுறை நம் நாட்டில் பஞ்சம் ஏற்படுவது சகஜமாகிவிட்டது. அக்காலங்களில் ஏழைஜனங்கள் தொழில்தெரியாமல் பசிப்பிணியின் கொடுமையினால் திருடவுந் தொடங்குகிறார்கள். மதுரைஜில்லா மேலூர்தாலுகாவில் பெரியாற்றுப் பாசனம்ஏற்பட்டுக் கள்ளர்கள் விவசாயத்தொழிலில் அமர்ந்தபிறகு, திருட்டுத்தொழில் மிகவும் குறைந்துவிட்டது. இதற்குக்

காரணம் தொழிலேயாம். ஆகையால் ஏழைகளுக்குத் தொழிற்பாடசாலைகள் ஏற்படுத்தித் தொழில் கற்றுக்கொடுப்பதைப்போன்ற புண்ணியம் தற்காலத்தில் வேறில்லை. இதற்குத் தற்காலம் பெரும் பொருள் சத்திரஜைவேஜ௱களிலேயே காணலாம். அதுவே தர்மமாகும். அதுவே பிழைக்கும் வழி கற்பிக்கச் சாதனமாகவேண்டுவது. நம் நாட்டுத் தார்மிஷ்டர்கள் இதனை நீளநினைந்து தர்மங்களைத் தக்கவழியிற்பயன்படுத்துவாராக. "போனக மென்பது தானுழந் துண்டல்" என்பது மூதாட்டியின் முதுமொழி. அவ்விதம் நாம் ஏழைகளுக்கு அவரவர்களே உழந்துண்ணும்படியான வழிகளைக்கற்பித்து அவர்களை ஈடேறச்செய்து நம் நாட்டையும் ஈடேறச்செய்வதே நம்நாட்டு உத்தமர்களின் கடமையாம். கனதனவான்கள் இதனைச்சீர்தூக்கி நம் நாட்டின் ஏழைகளைக் கைதூக்கிவிட முயற்சிப்பாராயின் தற்காலம் போல் அன்னசத்திரங்கள் அதிகம் வேண்டிவாராது. அன்னசத்திர தர்மங்களை நடத்துவோரே இதற்குமுதல்வழி காட்டிகளாக இருந்து தர்மத்துக்கு ஏற்பட்டசொத்தை நல்வழியிற்பயன்படுத்தக் கடமைப் பட்டவராவர். தொழிற்சாலைகள் அதிகரிக்க அதிகரிக்க சிறைச்சாலையிலுள்ள ஜனங்களும் குறைவார்கள். நாட்டின் நலம் நன்குபெருக எல்லோருக்குஞ்சுகிர்தமுண்டு.

---

## நன்மொழி.

32. நாம் அடையும் எல்லாச் சுகமும் ஈசன் அருளால் என்று நினைக்கவேண்டும். அவரின்றி ஆநந்தமில்லை. ஆநந்தமே சுகிர்தம் சுகிர்தமே சுகத்திற்குக் காரணம்.

33. அன்பு என்ற நுண்ணிய மயிரிழையால் ஆயிரவரைக்கட்டலாம். வசமாக்கலாம், பலாத்காரம் என்ற தேர் வடத்தால் ஒருவனைக் கட்டமுடியாது- வசமாக்கல் இயலாது

34. கொடாத லோபியை, கொடுத்தும், பொய்யனை மெய்யே பேசியும், நல்வழிப்படுத்து.

35. இறைவனிடம் அன்பு அதிகப்படுமாகில், எல்லாக் கஷ்டமும் லேசாக ஆகிவிடும் அன்பால் மனம் தைரியம் பெறும். மனமாசு அகன்றுவிடும். நன்நினைப்புண்டாகும். தீயநினைப்பு எழாது.

# மதங்களுக்குள்சகோதரதர்மம் நிகழவேண்டுமென்பது.

—o—

## மதங்களின் சாமாந்யதத்துவங்களும் நீதிமுறைகளும்.

### உபோற்காதம்.

1. மனிதசரித்திரம் நடைபெறும் காலமெல்லாம் எல்லாக்காலங்களிலும், கடவுளைப்பற்றிய ஆராய்ச்சியை, மனிதன் செய்துகொண்டு வந்திருக்கிறான். அவ்வாராய்ச்சியின் பயனாக, உலகத்திலுள்ள பல சமயங்கள், சாதாரண ஜனங்களைவிட ஈசுவரத்தன்மை அதிகமாக விகசிக்கப்பெற்ற மஹாபுருஷர்களால் வெளிவந்திருக்கின்றன. இம்மாஹாபுருஷர்களுக்கு பல நாமங்கள் உண்டு. அவையாவன, தீர்க்கதர்சிகள், ரிஷிகள், தேவானுக்கிரகம்பெற்ற மனுஷர்கள், ஈசுவரபுத்திரர்கள், என்பனவாம். அவர்கள் எல்லாரும், ஈசுவரப்பிரசாதம் பெற்ற மஹாத்மாக்களாகவும், மனிதவர்க்கத்தின் க்ஷேமத்தைப் பாதுகாப்பவர்களாகவும், மனிதவர்க்கத்திற்கு குருஸ்தானங்களாகவும், அமைந்திருக்கின்ற ஞானசகோதரர்களின் ஒரு மஹத்தான சபையின் அங்கத்தினராக இருக்கிறார்களென மதிக்கற்பாலர். இவர்களால் உலகத்திற்குக் கிடைத்திருக்கிற மதங்கள்பலவாயினும், அம்மஹாபுருஷர்கள் ஒவ்வொருவரும் ஒரேவிதமான உபதேசங்களைச் செய்துள்ளார். ஒரேவிதமான மூலதத்துவங்களையும், என்றும் மாறாத ஒரே நீதிமுறையையும் உபதேசித்திருக்கின்றார்கள் ஒரேமாதிரியான உயர் நலம் அமைந்த ஒழுக்கங்களை ஒழுகிக்காட்டியும் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாரும் பூஜிக்கத்தக்கவர்களே. அன்புக்குரியர்களேயாம். ஆனால் அந்த உபதேசங்கள், உண்மையில் ஒரேதன்மையனவாயினும், காலதேசவர்த்தமானங்களுக்கு ஏற்பவும், அந்தந்த ஜாதியாரின் தகைமைக்குத்தக்கவாறும், எவ்விதமுறையில் வெளியிட்டால், அந்தந்த ஜாதியாருக்கு நலம் பயக்குமோ அம்முறையில், அந்த ஞானிகள் மத நீதி தர்மங்களை வெளியிட்டிருக்கின்றார்கள்.

ஒருகாலத்தில் ஜனங்களுக்கு, அவரவர் கடமையையும், உத்தரவாதத்தையும், அவரவர் நேர்மையாக ஒழுகும் முறையையும், அறிவுறுத்தும்படியாகவும், ஒருகாலத்தில், பரிசுத்தமான சீலத்தை அறிவுறுத்தவும், ஒருகாலத்தில், சத்தியத்தை ஸ்தாபிக்கவும், ஒரு

காலத்தில், வனப்பின் உண்மையையும் நேர்மையையும் ஸ்தாபிக்கவும், ஒருகாலத்தில், விஞ்ஞானப்பயிற்சியை உண்டுபண்ணவும், ஒருகாலத்தில், ஒருவன் தன்னையே 'தியாகம் செய்தலின் உயர்நலத்தை ஸித்தாந்தப்படுத்தவும், ஒருகாலத்தில் இறைவன் அந்தர்யாமியாக எங்கும் இருக்கின்ருர் என்ற உண்மையை நாட்டவும், இவ்விதம் பலகாலங்களில் பலகாரணார்த்தமாக மஹாபுருஷர்கள் அவதாரம் செய்துள்ளார். இக்காரணங்களினல், மதங்கள் வேறுபடுகின்றன. இவ்வேறுபாடுகள் எல்லாம் ஒருங்கேசேர, பூரணம் உண்டாகின்றது. அதனல் உலகமுழுவதற்கும் குறைவில்லா நிறைவுள்ள ஞானம் ஏற்படுகின்றது. அவ்வேற்றுமைகள் இருக்கின்றமை விசனிக்கத்தக்கதன்று. அவைகள் உணர்ந்து நலம் தரும்படி உபயோகிக்கப்பாலன. அவனவன் பிறந்த மதத்தில் அபிமானம்இருத்தலுடன், பிறர் மதத்தின் உண்மையை அறிய ஆவாக்கொள்ளுதலும்வேண்டும். அவரவர் மதஸ்தாபகரான மஹாபுருஷரின்பால், உயர்ந்த பக்தியும் நன்னம்பிக்கையும் இருத்தல் நியாயமே. அவசியமும் தான். மற்ற மதஸ்தாபனுசாரியர்களும், புண்ணியபுருஷர்களும் நம்மால் நன்குமதிக்கத்தக்கவர்களேயாவர். நம்முடைய பூஜார்கமானவர்களேயாவர்.

"அம்மஹான்கள் முகமாய் அன்றே! மருளான இருளில் மயங்கி உழலுகின்ற மானுடர் உயர் நலம்பெற, ஈசன் தம் ஞானஜோதியின் போதுமான அம்சத்தை பரமகருணையினுல், வெளியிடுகின்ருர்."

2. பூர்வத்தில், உலகத்தில்உள்ள பலதேசங்கள்போக்குவரத்து இல்லாமல்,இக்காலத்தைவிட அதிகமாகவேறுவேருகவும் தனித்தனியாகவும் இருந்தன; அந்தந்த தேசத்திற்கு உரிமையானதென்றும், அந்தந்த தேசத்தின் வரம்புக்குட்பட்டும், மதங்கள் நடைபெற்றன. ஒருமதத்தினின்று மற்றொருமதத்திற்கு ஒருவனை பெயர்த்தல் என்ற வழக்கமே இன்ரும். ஒருநாட்டில் பிறத்தல்போன்று, ஒருமதத்தில் ஒருவன் பிறப்பான். அப்போதைக்கப்போது, ஏக தேசத்தில், ஒருவன் தான்பிறந்த நாட்டைவிட்டு தன்னிச்சையால் தேசாந்தரம்போய் வேறுநாட்டானுக ஆவதுபோல, ஏகதேச

த்தில், சிற்சிலசமயத்தில், தான்பிறந்த மதக்கொள்கையைத் துறந்து, தன் மதியுணர்ச்சியினால் வேறுமதக்கொள்கையை ஒருவன் அப்பியசித்தலும் உண்டு; ஆனால் இத்தன்மையான சம்பவங்கள் வழக்கமாக நிகழவில்லை. ஏகதேசயானவைகள். ஒருமதம், மற்ற மதத்திற்கு இடையூறு செய்துகொண்டு தன்னை அபிவிர்த்திசெய்துகொள்ளவியக்தமாய் முயற்சிக்கவில்லை.

3 ஆகவே, பூர்வகாலத்திலுள்ள ஜாதியார்களின் சரித்திரத்தை ஆராய்ச்சிசெய்வோமாகில், எகிப்தியர் அவருடைய மதத்திலும், அஸ்ஸிரியர் அவருடைய மதத்திலும், யூதர்கள் அவருடைய மதத்திலும், ஹிந்துக்கள் அவருடைய மதத்திலும், அவர்களின் உள்வகுப்பினரான ஜயினர்களும் அவர்கள் மதத்திலும், தனித்தனிப் பிரத்தியேகம் பிரத்தியேகமாக நடைபெற்றார்களென அறிகிறோம். பின்பு பௌத்த தர்ம சீர்திருத்தம் உண்டானது; அது ஹிந்துமதம் முழுமையும்பரவியது; அன்னியநாடுகளிலும் பரவும்படியாய் பௌத்தமத தூதர்கள் (Missioneries) அனுப்பப்பட்டார்கள். கிறீஸ்து மதத்திற்கு முன்னர், முதல்முதல், தான் பிறந்த நாட்டைக்கடந்து வெளியேறிப்பரவும்படி முயன்றமதம் இந்த பௌத்தமதமே. அதுபோலவே, கிறிஸ்துமதமும் தான் பிறந்த பூமியைவிட்டு முற்றும் வெளியேறி, எங்கே பார்த்தாலும் பரவி மேனாட்டார்களை ஒரேமதஸ்தர்களாகச் செய்திருக்கின்றது. இஸ்லாமென்ற முகம்மதிய மதம், அரேபியா தேசத்தில் தோன்றியது. அது முன் பிரஸ்தாபித்த இரண்டு மதங்களைப்போல தன் ஜனன பூமியை விடாமலும், அவைகள் இரண்டையும் போலதான் பிறந்த தேசத்திற்குப் புறம்பாய்பலதேசங்களில், பரவியும் முக்கியமாக ஆசியாகண்டத்தில் ஸ்திரமாக குடிகொண்டிருக்கின்றது. இம்மூன்று மதங்கள் தான் உலகில் பிறமதஸ்தர்களை, அம்மதங்களினின்று பெயர்க்க முயற்சிக்கின்ற மதங்களாம். கிறிஸ்துமதமும், இஸ்லாம் மதமும், யுத்தவீரர்களாலும், வெற்றிகொள்பவர்களாலும் அனுசரிக்கப்படுகின்றன. அவர்கள் ஜெயிக்கும் நாடுகளில், நாட்டப்படுகின்றன. ஜோராஸ்தர் மதம் ஒருகாலத்தில், பாரஸீக தேசத்தில் மிகவும் பிரபலமாக இருந்தது; அது அத்தேசத்தினின்று பின்புதுரத்தப்பெற்று, இந்தியா தேசத்தில்புகலிடம் பெற்ற பார்ஸீகங்களின் அனுஷ்டானத்தில் இப்போதிருக்கி

மதங்களுக்குள் சகோதரதர்மம் நிகழவேண்டுமென்பது. உகரு

ன்றது. ஒவ்வொரு மதத்தின் கண்ணும், மதக் கொள்கைகளிலும், அனுஷ்டானங்களிலும் பல வேற்றுமைகள் உண்டாகி, அதனால், பல உட்பிரிவான சமயங்கள் ஏற்பட்டிருக்கின்றன. உதாரணமாக, ஹிந்துமதத்தில், சைவம், வைஷ்ணவம், சாக்தம் பின்னும் பலவாறான உட்பிரிவுகளும், கிறிஸ்து மதத்தில், கிரேக், ரோமான், அவைகளல்லாதவர்களும் பலவகுப்பினரான புரோட்டேஸ்டெண்டுகளும், பௌத்த மதத்தில், மஹாயானம் ஹீனயானம், அதாவது உத்தரத்தார், தக்ஷிணத்தார் என்ற உட்பிரிவுகளும்; முஹம்மதியமதத்தில், ஷியாஸ், சூன்னிஸ் என்ற வகுப்புக்களும் இவ்விதம் உண்டாகி நடைபெறுகின்றன.

4. ஆயினும், அந்தந்த மதத்தின் உள்வகுப்பினர்கள் ஒன்று சேரும்கால், அந்தந்த பெரிய வகுப்பினராகிப் பிரிகின்றார்கள். ஹிந்துக்கள், கிறிஸ்துவர்கள், முகம்மதியர்கள், முதலானவர்களாகப் பிறிகின்றார்கள். அததன் உட்பிரிவுகள் அப்பெரிய வகுப்பில் மறைகின்றன. அவ்விதமே உலகத்தில் உள்ள எல்லா மதங்களும் தத்துவ மூலங்கள் அமைந்த ஒரே மதமான, பிராண விருக்ஷத்தின் பல கிளைகள் என மதிக்கற்பாலனவாம். அந்த விருக்ஷத்தின் மூலங்கள் பிரஹ்மஞானம் என்ற நிலத்தில் ஆழமாக வேரூன்றி கிடக்கின்றன. அதன் இலைகளோ, பல ஜாதியாருக்கு சுகிர்தம் பயப்பனவாக இருக்கின்றன. அவைகளுக்குப் பொதுவாக ஒருநியம் உளது. அதாவது ஈசுவர ஞானம், பிரஹ்மஞானம், (இறைவன் அறிவு). அதுவே நித்யத்துவம். அந்நியத்தை அடைய பலவிதமானமுறைகள் உள்ளன. எல்லா முறைகளின் முன்னர், ஒரே பேறு, ஒரே லக்ஷியம் உள்ளது, அதாவது, ஆத்மசுத்தியால் பூர்ணம்பெற உதவிபுரிதலேயாம். எல்லா மதங்களினுடைய சாமாந்ய தத்துவங்கள் பொதுவாகவே இருக்கின்றன. அவைகளில் யாதொரு வித்தியாசமுமில்லை. முன்னமேயே பிரஸ்தாபித்த காரணத்தினால், சிற்சில விவரங்களில், வித்தியாசம் இருக்கின்றது. ஓரோர் தத்வாம்சத்தை ஓரோர்மதத்தில், ஓரோர் காலத்தில் உயர்வுபடுத்தலினாலும் இவ்வித்தியாசம் ஏற்படுகிறது.

5. இக்காலத்தில், உலகத்தில் பல தேசங்களுக்குள், போக்கு வரத்து, அதிகமாகவும், அதிக சுலபமாகவும், அதிக சீக்கிரமாகவும், நிகழ்கின்றது. அதனால், ஒருமதம், வேறு மதத்துடன் சம்பந்திக்காமல், தனிமையாக, தானே இருத்தல்கூடாது. மனசங்கற்பங்களும் எண்ணங்களும், வரவர உலக முழுமையும் பரவு மியல்பினவாக ஏற்பட்டு வருகின்றன; ஒவ்வொரு மதமும் பிறமதத்துடன் சம்பந்தம் பெற்று, அம்மதத்தினின்று உபயோகமான விஷயங்களைக்கொள்ளுதலும், அம்மதத்திற்கு உபயோகமான விஷயங்களைக்கொடுத்தலுமான இவ்விருவகையால், உலகத்திற்குப் பிரயோஜனம் செய்துகொண்டுவருகின்றது; இவ்வகையான, கொள்ளுதல், கொடுத்தல் முறை என்ற சம்பந்தம், இப்போது நடைபெறுகின்ற மதங்களுக்குள் மாத்திரம் நிகழ்வதன்று. முன்னிருந்து இப்போது மறைந்துபோன, பூர்வ மதங்களின் உண்மைகளும் தத்துவங்களும், அம் மதங்களை அனுஷ்டித்த பூர்வீகர்களின் நாகரீக சம்பந்தமான கல்வெட்டுகள் கட்டிடங்கள் மூலமாய் வெளியாகின்றன. அவை புதைந்து சேமித்திருந்தவைகள் இப்போது தோண்டப்பெற்று வெளிவந்திருக்கின்றன. அவ்வுண்மைகளையும் தத்துவங்களையும் ஆராய்ச்சி செய்வதில், மதங்கள் எல்லாம் ஒரே தன்மையான தத்துவங்களை அமைத்துக்கொண்டிருக்கின்றன என்பது பரிஷ்காரமாய் சித்தாந்தம் பெறுகிறது. எல்லா மதங்களுள்ளும் முக்கியமான மூலதத்துவங்களும், அவைசம்பந்தமான, அறிகுறிகளும் (symbols), கிரியைகளும் (rites), உபதேசங்களும், பொதுவானவைகளாகவே இருக்கின்றன. அமுக்கியமானவைகள் பலவாறாக விரிகின்றன. ஆகவே, முக்கியமானவை இன்னவை யென்றும், அமுக்கியமானவை இன்னவை யென்றும், என்றும் மாறாத அம்சங்கள் இன்னவை யென்றும், மாறக்கூடியவை இன்னவை யென்றும், எங்கும் என்றுமுள்ள சாமாந்யஉண்மைகள் இன்னவை யென்றும், காலதேசத்தை அனுசரித்தவை இன்னவையென்றும், ஒவ்வொரு மதத்திலும் பிரித்து, ஆராயவேண்டும். இப்படிச் செய்தால், எல்லா மதங்களிலுமுள்ள சிறுவர்களுக்கு நிர்சந்தேகமாயும் நிர்ப்பயமாயும் உபதேசிக்கும்படியான, சமய தத்துவமுறையும், நீதிமுறையும் ஏற்படும். இம்முறைகளோ ஈசுவரன், ஜீவன், பிரபஞ்சம் இம்மூன்றைப்பற்றி மனிதவர்க்கத்தில் தோன்

றிபிருக்கின்ற "உயர்வற உயர்நலம், மருள் அற மதிநலம்" பெற்ற மஹா புருஷர்களால் அனுபவசித்தமாய் அறிந்து அருளப்பெற்ற விஷயங்களாம். ஞான விகாசமுறையில், அவ்வுயர்படி யேறியவர்கள் யாவரும் அவைகளை அனுபவித்து உறுதிப்படுத்தக் கூடியவையுமாம். இந்த சமய தத்துவங்களும் நீதி முறைகளும் உலக சரித்திரம் உதயமாகும் முன் முதல் தொன்று தொட்டு மஹா புருஷர்களின் அனுபவசித்தமான ஒரே வாக்காக முழங்குகின்றன. இப்போது வெளிவந்தமட்டில் புதைந்து சேமித்திருந்த பூர்வீக நாகரீகங்களின் சிந்நங்களைப் பார்ப்பதினாலும், (Oannes) ஒவான்னேஸ் என்ற பாபிலோனியாவின் மஹா புருஷன் காலமுதற்கொண்டு, முகம்மதுநபி காலம் ஈறாக, உலகத்தில் தோன்றியிருந்திருக்கின்ற ஒவ்வொரு நாகரீகத்தின் உதயகாலத்தில் அவதரித்த மஹா ஞானிகளின் அனுப சாக்ஷிபத்தாலும், இத்தத்துவங்களும் நீதிமுறைகளும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றன. மற்றைய சாஸ்திரவிஷயங்கள் எத்தன்மையனவாயினும், அவைகளை இத்தன்மையான கம்பீரமான மஹாபுருஷர்கள் ஒரேவிதமாக ஆதரிக்கவில்லை. நம்முடைய குழந்தைகளுக்கு, அவர்கள் அனுபவத்தில் இல்லாதவிஷயங்களை கற்பித்தல் கூடுமென்றும் நேர்மை யென்றும் ஒப்புவோமானால், இத்தகைய பொதுப்படையான சாமாந்ய தத்வத்தையும், நீதிமுறையையும் கற்பித்தல் நியாயமென்றே ஏற்படும்.

6. ஒவ்வொரு மதத்திலும் ஈசுவரபிரஸாதத்தாற் கிடைத்த அருள்வாக்குகள் உண்டு. அவை அந்தந்த மதத்தின் தீர்க்கதர்சிகளாலும் ஞானதுரவர்களாலும் சொல்லப்பட்டவை, அல்லது எழுதப்பட்டவை. ஆனால் அவைகளைப்பற்றி அந்தந்த ஜனங்களுக்குள் உண்டாகும் மதிப்பு எப்போதும் ஒரே தன்மையானதாக இருந்திருப்பதன்று. பலகாலங்களில், ஏற்றத்தாழ்வுள்ளதாகவே இருந்து வருகிறது. ஹிந்துக்கள் எல்லோரும் வேதங்களை அங்கீகரிக்கின்றார்கள், போற்றுகின்றார்கள். ஆனால் அவைகளின் பொருள் கோள் விஷயத்தில் அவர்களுக்குள் ஒற்றுமை இல்லை. சில சம்பிரதாயத்தார் வேறு வேறு பாடங்கள் உள்ளன என்கிறார்கள். அவர்களுக்குள் பலகாலங்களில் உண்டானவும் பலவிதமான ஏற்றம்தாழ்வு உள்ள மதிப்புள்ளவுமான பல சாஸ்திரங்கள் இருக்கின்றன. ஜோராஸ்

திரியர்களுக்குள் காதாஸ் (Gathas) என்ற நூலும், ஜென்டாவஸ்தா (Gendavasta) முதலான நிகமங்களும், யூதர்களுக்குள் தர்ம முறைபற்றிய புஸ்தகங்களும் (books of the law), தீர்க்கதர்சிகள் (Prophets), என்ற திவ்விய கிரந்தங்களும், பௌத்தர்களுக்குள் திரிபதகம் முதலிய கிரந்தங்களும், கிறிஸ்துவர்களுக்குள் விவிலிய நூலும், ஆக்ஷேபணைக்குட்பட்டதான கட்டுக்கதைகளும் (Apocrypha), முகம்மதியர்களுக்குள் ஆல்கோரானும், இருக்கின்றன. மேற்கண்ட சாஸ்திரங்களும் இப்போது நடைபெறுகின்ற சமயங்களுடையவும் முன்னிருந்து இப்போது மறைந்துபோன சமயங்களுடையவும் மற்ற நிகமங்களான திவ்விய கிரந்தங்களும் கற்கத்தக்கவை. களங்கமற்றவும், துவேஷம் நீங்கினவுமான, மனத்துடனேயும், அன்பு ஆதரவுடனேயும், அவைகள் வாசிக்கத்தக்கவை. அவைகள் உலகத்தின்கண் தோன்றிய காலமுதலான சரித்திர விஷயங்களை, பண்டிதர் தான் தீர்மானிக்கக்கூடும். அவைகளின் தெய்வீக சம்பந்தமான கவுரவத்தை, ஞானி தான் தீர்மானிக்க இயலும். அவைகள் வெளிவந்த காலங்களைப்பற்றியும், அவைகளின் கிரந்தகர்த்தாக்களைப்பற்றியும், அவைகளின், யதார்த்தத்தைப்பற்றியும் எவ்விதமான வாதங்களும் தர்க்கங்களும் இருப்பினும், அவைகள் மனிதனைப்பற்றியும், அவன் விகாசமுறையைப்பற்றியும், அத்தியந்த சம்பந்தமுள்ள பழமையான கவுரவமுள்ள கிரந்தங்களாக இருக்கின்றமையாலும், பூர்வீக சரித்திரத்தின் உண்மையைவிளக்கும் முறையின் உபயோகமாக இருக்கின்றமையாலும், எல்லா மதஸ்தர்களும் படிக்கற்பாலவை. சமயங்களின் சாமாந்ய தத்துவங்களை ஆதரிப்பதற்காக, அவைகள் இப்புஸ்தகத்தில் மேற்கோள்களாக எடுத்துக் காட்டப்படும், ஆக்ஷேபணையில்லாத பொய்யா மொழிகளாக யாவரும் அங்கீகரிக்கவேண்டுவது என்பது எம்கருத்தன்று. விசாரணையில் நாம் குறித்துக்காட்டும் தத்துவத்தை அந்த மதகிரந்தமும் உபதேசித்தது என்பதற்கு ஒரு சாக்ஷியமாகமாத்திரம் அவைகளின் உபயோகம் நிகழ்வது. அம்மொழிகள் எம்மாத்திரம் மதிப்புள்ளன என்பதை அந்தந்த மதவித்தியார்த்தி தாமே தீர்மானித்துக் கொள்ளவேண்டியது. இவ்வித ஆராய்ச்சி, இப்புஸ்தகத்தின் வரம்புக்குப் புறம்பாய் உள்ளது. அதன் தீர்மானம் அந்த மதஸ்தனின் நம்பிக்கையைப் பற்றியதாக விருக்கிறது.

7. உலகத்திலுள்ள மதங்களின் பொதுவான சாமானிய தத்துவங்கள் அல்லது உண்மைகளாவன:—

(1) கடவுள் ஒருவர் - தானாய், தனிமுதலாய், உள்ளவர்.

(2) முப்பான்மையாக, ஒரு பிரஹ்மாண்டத்தில், அவர்வெளியாவர்.

(3) தேவகணங்களின் சம்பிரதாயம்.

(4) ஜீவன் பல சரீரம் எடுத்தல்.

(5) காரண காரிய பாரம்பரை அல்லது விதிமுறை.

(6) மனிதனின் விகாசம் அல்லது மலர்ச்சி நடைபெறும் மூன்று லோகங்கள்.

(7) மனிதர்கள் சகோதரத்தன்மை பாராட்டவேண்டுவது என்பனவாம்.

பொதுப்படையாய் இந்த உண்மைகளை, (அந்தந்த மதங்களுக்குரிய விசேஷங்களான வேற்றுமைகளைத் தவிர்த்து,) எல்லாக் குழந்தைகளும், கற்கவேண்டும். அவைகளை எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் கலாசாலைகளிலும் கற்பிக்கவேண்டும். அந்தந்த மதசம்பிரதாயத்தை கற்பிக்க ஏற்பட்டுள்ள பாடசாலைகளில் (denominational Schools) இந்த சாமாந்ய உண்மைகளுடன், அந்தந்தமதத்திற்குரிய விசேஷவிஷயங்களை கற்பித்தல்முடியும் - அதில்ஆக்ஷேபணையில்லை. ஆனால் எல்லாமதங்களிலும் காணப்படும் இந்த சாமாந்ய உபதேசங்கள் யாவருக்கும் பொதுவானவை - நீதிமுறை கற்பித்தலில், படிப்பவர் மனசில் உறுதி பயக்கக்கூடிய அஸ்திவாரமாக இருக்கின்றன. இவை இப்புஸ்தகத்தின் முதற் பாகம். இரண்டாம்பாகத்தில், அந்தந்த மதங்களுக்குரிய விசேஷ உண்மைகளும் அவைகளைப்பற்றிய கிரியைகளும் கர்மானுஷ்டானங்களும் அந்தந்த மதஸ்தர்களால் எழுதப்படும். மூன்றாம்பாகம் நீதிமுறைகளைப்பற்றிச் சொல்லும்.

அந்நிபெஸண்டு.

## புனர் ஜன்மம் உண்டு என்பதும் அதன் அவசியமும்.

(162-ம் பக்கத் தொடர்ச்சி.)

4. வேறொரு விதமாக நோக்கில், தனித்தனியான சிருஷ்டி முறையானது, விபரீதமாயிருக்கிறதாகத் தெரியவரும். இந்தச் சித்தாந்தப்படி சொற்பமணிகாலத்தில்இறக்கக்கூடிய ஒருசரீரத்துக்கு, ஒரு ஆத்துமாவை ஈசுவரன் சிருஷ்டிக்கிறான். பூமியில் ஜீவனுக்கு யாதாயினும் ஒரு அனுபவம், வித்தை, அல்லது மற்ற பிரயோசன மிருக்குமாகில், அஜ்ஜீவன் அச்சரீரத்தை அதிக சீக்கிரத்தில் இழக்கிறதால் அத்தகைய பிரயோசனம் இன்றி அந்த ஜனனம் வீணாகப் போய்விடுகிறதன்றோ? அஜ்ஜன்மம்ஏற்படுவானேன்? மேலும் இன்னொரு பக்ஷமாகக் கவனிப்போம்; பூமியில் மனித வாழ்க்கையானது விசேஷப் பிரயோஜனமில்லை; அதுவோ அனேக பாபச் செயல்களுக்கும், துன்பங்களுக்கும் உட்படக்கூடியது; மரணத்தின்மேல் நித்தியமான துக்கத்திற்குள்ளாகும். இவ்விதமாகச்சொல்லக்கூடும். இவ்விதமானால் வார்த்திகப்பருவம்வரை நீடித்திருக்கக்கூடிய ஒரு சரீரத்தில் பிரவேசிக்கும்படி ஆத்மாவைச் செய்தல் அநீதியன்றோ! இந்தப் பக்ஷத்தில், சரீரம் பெறுதலினால், ஆத்மாவுக்கு யாதொரு பலனும் இல்லைகாண். துன்பமே அதன் கதியாகிவிட்டது. தனித்தனியான சிருஷ்டிவிஷயத்தில் நேரிடும் அநீதிகளின் ஜாப்தா சொல்லிடில் வரம்பின்றி விரியும். ஏனெனில் அதனுள் எல்லாவித தாரதம்மியங்களும் அடங்கும். இந்த அபிப்பிராயமானது புத்திக்குப் பொருத்தமன்று. இதை அறிஞர் மனம் ஒப்பாது; மனச் சாட்சியும் ஏற்காது. அதனால்தான் அனேக புத்திமான்கள் இவ்வபிப்பிராயத்தின் கொடுமையால் நாஸ்திகர்களாகிவிட்டார்கள். இம்முறையில் மனிதன் கடவுளைப்பார்த்து "நீர் என்னை ஏன் இப்படி சிருஷ்டித்தீர்" என்று கண்டிப்பாய் வினவும்படியான இறக்கமற்ற கடனாளியாகவும், கடவுள் கடன்பட்டவராகவும் ஏற்படுகிறார்கள்.

5. புலனறிவு சாஸ்திரசித்தாந்தமானது முன் தனித்தனி சிருஷ்டிமுறையைப்போல் அவ்வளவு தெய்வ நிந்தனைக்கு இடங் கொடுக்கக்கூடியதன்று. ஆனால் இச்சித்தாந்தத்தில்சொல்லும் பரம்பரை தர்மமானது சரீரங்களைப்பற்றி மாத்திரம் நிகழ்கின்றது. மனசு, புத்தி இவைகளின் விகாசமுறையைப்பற்றி பிரஸ்தாபம் ஒன்றும் இல்லை. டார்வினர்கள் இவைகளையும் சேர்த்து சமாதானம் சொல்லி

சித்தாந்தப்படுத்த முயன்றார்கள். அது முடியாமற் போயிற்று. இவர்கள் சித்தாந்தத்தில் சிறிய மீன் பெரிய மீனுக்கு இறையாகவும், அதனால் சரீரத்திற்கு உயர்வான சம்ஸ்காரம் உண்டாதலும், உயர் வாழ்க்கைக்குப் போட்டியும் போராட்டமுமே, உலக தர்மம் என்றும், ஏற்படுகிறது. இவ்விதமானால் ஜனசமூகத்தில் நிகழும் அன்பு ஆதரவுள்ள சிநேக முறைகள் உண்டாதல் எங்ஙனம்? ஒருவனுக்கு உயர்நலம் அமைந்த எண்ணங்கள், குணங்கள், வயதுசென்ற மேல்தான் விருத்தியடைகின்றன. அக்காலத்திலே குழந்தை உண்டுபண்ணக்கூடிய அவதியைத் தாண்டிவிடுகிறான். குழந்தை பிறக்கும்பருவமானது, ஸ்தூலசரீரம் வீரியமுள்ளதாகவும், தாருட்டியமுள்ளதாகவும் மனசு புத்திகள் அதிகமாக அபிவிருத்தியடையாமலும் யௌவன பருவத்தில்தான் இருக்கும் அன்றோ? யௌவனம் போன மேல் மனசு புத்தியின் அபிவிருத்திகள்ஏற்படுகின்றனவே. அப்போது அம்மனசு, புத்திகளின் உயர்நலம், குழந்தைகளுக்கு இறங்குவது எங்ஙனம்.? குழந்தை உண்டாகும் பருவம் முடிவுபெற்றதன்றோ? இச்சித்தாந்த முறையின், இப்போது ஆராய்ச்சியின் பிரகாரம், ஒருவன் தான் புதிதாய் அமையப்பெறும் குணம், புத்திநுட்பம், இவை அவன் சந்ததிக்கு இறங்குகிறதில்லை. எவ்வளவுக்கு எவ்வளவு விகாசமுறையின்படி உயர்வாக விருக்கிறதோ, அதாவது மனசு, புத்தி முதலியவை உயர்நலம் பெற்றிருக்கிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு சந்ததி சொற்பமாக உண்டாகும்.

6. அதிபுத்திமான் மலடு என்ற வசனம் உளது. அதாவது அவனுக்கு சந்ததி உண்டாவது இல்லை. இந்த உண்மையைவைத்துக்கொண்டு மேற்கண்டபுலன் அறிவு சாஸ்திரத்தின் பரம்பரை தர்மம் என்ற சித்தாந்தத்தை அளவிடுவோமாகில், மனித வர்க்கத்துக்கு ஞானமுதலான உயர்நலம் உள்ள அபிவிருத்தி உண்டாதலுக்கு இடமில்லை எனமுடியும். அறிவு உயர, சந்ததிகுறையும். பெற்றோர் அறிவில் தாழ்ந்தாராகில் சந்ததிபெருகும். நூதனப்பேறுகளான புதிய குணங்கள் முதலியன, சந்ததிகளுக்கு இறங்குகின்றனவில்லை, என்பது இச்சாஸ்திரங்களின் துணிபு. இதனால் இச்சாஸ்திரத்தின் கதி மேலோடாமல் நிற்கிறது. உயர்நலம் உள்ள பிரஞ்ஞாவான், ஞானி இவர்கள் உண்டாவதற்கு இச்சித்தாந்தத்தில் யாதொரு சமாதானமும் இல்லை. அதிபுத்திமான் (Genius) நீலநிறமுள்ள ஆகாசத்தினின்று முன்னும் பின்னும் சம்பந்தம் இல்லாமல் குதிக்கிறான் என்று சொல்லுவதாயிற்று.

7. மனிதவர்க்கத்தில் அதிபுத்திமான் பிறத்தல் என்பது இச்சித்தாந்தத்தால் காரியகாரண விதியை அனுசரியாமல், அதன்புறம்பாகவே ஏற்படுகின்றது. இச்சித்தாந்தத்தால் உயர்நலமுள்ள மனத்தையும், உயர் தூய்மையுள்ள சித்தத்தையும், இனிப்பெற எவ்விதவுபாயத்தால் கூடும் என்பதை நாம் முன்னரே அறியமுடியாது; ஆனால் முந்திபமுதலாம் சித்தாந்தம்போல, நாம் இச்சித்தாந்தம் சுதந்திரர்இல்லை, பரதந்திரராக இருக்கிறோம், என பயத்தைச்செய்கிறதில்லை. ஆயினும் ஜனங்களுக்குள் நடைபெறுகின்ற மேல் கீழ் என்ற தாரதம்மியங்களுக்கு சமாதானம் இச்சித்தாந்தத்தில் இல்லை. குடிக்கிறவன், விஷவியாதிக்கருக்கள் அமைந்த குழந்தைகளைப்பெறுகிறான். சில குழந்தைகள் அவ்விதமான துர்கதியை ஏன் அடைகின்றன என்பதற்கு சமாதானம் இல்லை.

8. புனர்ஜன்மம் என்ற சித்தாந்தமானது ஈசுவரன் உலகத்தை நீதியாகவும் நேர்மையாகவும் நடத்துகிறான் என்பதை உபதேசிக்கின்றது. ஒவ்வொரு மானிடஜீவாத்மா, அறிவு, அனுபவம், நன்மை தீமைகளைப் பகுத்தறியும்ஞானம், இவை வெளிப்படையாக இல்லாமல் குப்தமாக அமைந்த கருவுள்ளவனாகப் பிறக்கிறான். பின்பு விஷயநுகர்ச்சியால் சுகதுக்க அனுபவங்களைப்பெறுகிறான். முன்பிரஸ்தாபித்தபடி, அவைகளை மனச்சம்ஸ்காரங்களாக அமைத்துக்கொள்ளுகிறான். அதனால் ஒருவன் பிறக்கும்போது உள்ள குணம் முன்ஜன்மத்தில் அவனால் உண்டாக்கப்பெற்றது, என்பதையும், விகாசப்படியில் இவ்வளவுதூரம் ஏறியிருக்கிறான் என்பதையும் நாம் அறிவோம். நல்லசீலமும் உயர்ந்த அறிவும், மேலான சுபாவமும் ஒருவனிடம் இருந்தால், அவை எத்தனையோ ஜன்மங்களில் அவன் அதிகம்போராடி, கஷ்டத்தினால் பெற்றபேறு (பாக்கியம்) என்று அறிக. இவைகளுக்குமாறான குணங்கள் ஒருவனிடம் இருந்தால், அவை அவன் இப்போது சமீபத்தில்தான் மானிடப்பிறவியில் தோன்றியிருக்கிறான் என்றும் அந்த ஜீவான்மா அதிக விகாசம் பெறாத சிசு எனறும் அறிக.

9. இன்று காட்டுமனிதனாக இருக்கிறவன், இனி வருங்காலத்தில் உயர்நலம் அமைந்த ஞானியாவான். எல்லாரும் ஒரேமாதிரியான வழியில் நடைபெறுகிறார்கள். கடைமுறையில் மனிதராகப் பூர்ணநிலையைப் பெறுவார்கள். தவறுசெய்தால் துன்பம் தொடரும். அத்துன்பநிகழ்ச்சிக்கு எப்போதும் பரிஹாரமுண்டு. வலி

மையும் சக்தியும் போராட்டத்தினால் உண்டாகின்றன. நாம் விதைக்கிறதற்குத் தக்கபடி தவறாமல் பலனை அறுப்போம். நன்மை விதைப்பினதினின்று நலத்தையும், தீமைவிதைப்பினதினின்று துன்பத்தையும், அடைவோம். பிறந்தவுடன் மரிக்கும் குழந்தை முன் ஏற்பட்ட ஒரு ருணத்தைத் தீர்க்கிறான். பின்பு சீக்கிரத்தில் ருணம் தீர்ந்து, தான் அபிவிர்த்தியாகுமாறு, நூதன அனுபவம் பெற மறுபடி பிறக்கிறான். ஜனசமூகத்திற்கு சேர்மையான நற்குணங்கள், உலகயாத்திரைப் போராட்டத்திற்கு (Struggle for existence), அனுகூலமில்லாமல், சிலசமயத்தில் சரீரத்தையும் தியாகம் செய்யக் காரணமாக ஏற்படினும், இனிவரும் ஜன்மாந்தரங்களில், அவைகளால் அவன் உயர்ந்த சீலத்தைப் பெறுவான். தேசத்தின் நலத்தை விருத்தி செய்யக்கூடிய மஹா புருஷனாகவும் பிறப்பான்.

10. அநேக ஜன்மங்களில் செய்த முயற்சியின் பயனாக, மேதாவித்தன்மை என்ற தர்மமானது ஒருவனுக்கு உண்டாகிறது. அத்தகைமை அவனிடமே கருவர்க குடிகொண்டிருக்கிறது. அவனுக்கு ஸ்தூலசரீரமான சந்ததி பொய்த்துப்போனாலும், ஒவ்வொரு ஜன்மாந்தரத்திலும் அத்தகைமையானது பெருகிக்கொண்டே நிகழ்கிறது. பிதாவின்குடியால் விசேஷமேறின சரீரத்தை ஒரு ஜீவன் பெறுகிறான். பின்பு வேறு ஜன்மத்தில் முன்னரைவிட நல்லொழுக்கமுள்ளவனாக நடைபெறுகிறான். இதனால் முற்பிறப்பிற் செய்த வினையின் காரியமாக இப்பிறப்பின் நிலைமை உண்டாகிறது. மனிதன் அபிவிர்த்தி முறையின் உண்மைகளை அறிந்து அவைகள் குறிக்கும் நெறிகளைப்பற்றி நடப்போமாகில்விதியைநாம் சுவாதீனம் செய்துகொள்ளலாம். நல்ல சீலத்தை நம்மிடம் அமைத்துக் கொள்ளலாம், பரிபூர்ணனான புருஷனாகஆகும்வரை, அல் லக்ஷியத்தை முன் நோக்காகக் கொண்டு, நாம் மேன்மேலும் நலமுள்ள வழிமுறையில் நடைபெறுவோம். அதனால் கடைமுறையில் பூர்ணர்களாவோம்.

> தான் முன்னம் செய்த விதிவழி தானல்லால்
> வான் முன்னம் செய்து அங்குவைத்ததோர் மாட்டில்லை
> கோன் முன்னம் சென்னி குறிவழியே சென்று
> நான் முன்னம் செய்ததே நன்னிலமானதே—(திருமந்திரம்.)

ஓம் தத்ஸத்.

வி. வெங்குஸ்வாமி அய்யர்.

சுபமஸ்து.

# இந்திய புத்திரர்களின் சங்கம்.

---o---

1. நம் தேசத்தில் உள்ள வாலிபர்கள் தேசஅபிமானமும், பொதுநயம்பயக்கும் கைங்கரியங்களைச்செய்வதில்ஒப்புரவும், உற்ஸாகமும், ஊக்கமும், உள்ளவர்களாகமுயன்றுகொண்டுவருகிறார்கள். ஆனால்அவர்கள்உலகஅனுபவம் முற்றுமில்லாதவர்களாகவும் நொய்மையானசித்தம் உடையவர்களாகவுமிருக்கிறார்கள். அதனால்அநீதியானபாதகங்களைச்செய்யத்துணிந்திருக்கின்றசிலதீயர்களுருடைய பகட்டானவார்த்தைகளைநம்பிமதிமயங்கி, மெய்ம்மறந்து தீமையானவும்பாதகமானவுமானதொழில்களைச்செய்யத்தூண்டப்படுகின்றார்கள். செய்யவும்துணிகின்றார்கள். இத்தன்மையானவர்களை அத்தியர்களுடன்சேராமலும் அத்தீயர்காட்டும் வழிகழில் நடக்காமலும் தடுக்கவும், அவர்களை நல்வழிப்படுத்தவும், இந்த சங்கமானது ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இத்தியர்களின் தீயஅபிப்பிராயங்களும் துஷ்ட விஷமமான உபதேசங்களும் வரமரஅதிகஏராளமாகப்பெருகிக்கொண்டு வருகின்றன. அவர்கள் சிறியவைகளைக் பெரிதாகக்காட்டியும், உண்மையில்லாத விஷயங்களை உண்மைகள்போல விளக்கியும், உண்மையில்லாத போலிதேசஅபிமானத்தை பகட்டாகக்காட்டியும், கொண்டுசெலுத்த முடியாத விஷயங்களை முடிக்கக்கூடியவைபோல அலங்காரமான வசனங்களால் விஸ்தரித்தும், வருகின்றார்கள். அந்தவெளிப்பகட்டான விருதாவார்த்தைகளை நம்பிளைஞர்கள் உண்மையான உயர்நலம் பயக்கும் தன்மையன எனநம்பி மதிமயங்கித்தத்தளிக்கின்றார்கள். இத்தன்மையான வார்த்தைகளுக்குஉள்ளாகி, அனேகவாலிபர்கள் உத்தரவாதத்தை உணராத இத்தீயர்களால்தூண்டப்பெற்று, துர்மார்க்கத்தில்இறங்கி, தீமையானவும்கொடுமையானவுமானமஹாபாதகங்களைச் செய்கின்றார்கள். அச்செய்கையால், நம்முடைய மாதர் பூமியாகிய இந்தியா தேசத்திற்குக் குணக்கேட்டையும், கவர்வஹானியையும், அவமானத்தையும் விளைவிக்கின்றார்கள். நம்தேசத்தை உலகத்தார் நிந்தனையாகப் பேசவும் நினைக்கவும் செய்விக்கின்றார்கள். அத்தீய விஷமமான துக்ககரமான செய்கைகளை இதில் விவரிக்க மனம் எழவில்லை. இத்தீயர்கள் கூட்டம்கூட்டமாக ஒருங்குசேர்ந்து துர்போ

தனைகளையும் போலியான நன்மைகளையும் வர்ணித்து பையன்களை கவர்ந்து தம் வசமாக்கியும், ராஜ துரோகிகளாக்கியும், ராஜாங்கத்தை முற்றும் தூரத்த வீணான முயற்சிகளுக்கு அவர்களை யாளாக்கியும், அவர்கள்மூலமாக பலபாதகங்களை செய்வித்தும்வர, தேசமெங்கும் குழம்பி தாமரையிலையின் நீர்போல தத்தளித்துக்கொண்டிருக்கும் சமயத்தில், நம்தேசம் உயர்நலம்பெறவேண்டுமென்று உழைத்துக்கொண்டுவருகின்றசிலநல்லோர் நம்இளைஞர்களை இப்பாதகமான நெறிகளினின்று பெயர்த்தும், அவர்கள் அந்நெறி நன்னெறியென்று மதிமயங்கி எண்ணின எண்ணத்தைத்துறக்கும்படி செய்தும், நம் தேசம் மேன்மை அடையும்படியாக நல்வழிப்படுத்தவும், துணிந்து முன்வந்தார்கள். இது நியாயமே. அந்நல்லோர்களில் ஒருவர் யாரெனில் அவர் பெயரை உச்சரித்தமாத்திரத்தில் ஒவ்வோர் இந்தியர் மனமும் அவர்மேல் உயர்தர அன்பும் ஆதரவும் பாராட்டற்பாலது. 20 வருஷகாலமாய் இராப்பகலாய் ஓய்வு ஒழிவின்றி, நம் தேசத்தின் க்ஷேமத்தின்பொருட்டு உடல் பொருள் ஆவி மூன்றையும்தத்தம்செய்து, பாடுபட்டுத்தீவரமாய் உழைத்துக்கொண்டுவருபவர் அவர். நம் தேசத்திற்கு அவர் செய்துவரும் கைங்கரியம் நம்தேசத்தார் யாவரேனுஞ்செய்யாதபடி அவ்வளவுபெருகியது. பெருமையானது. அவர்தான் அன்னிபெஸண்டு என்ற அம்மையார். மேற்கண்டபடி நம்தேசத்தின் குழப்பமான கோரமானகாட்சியைப்பார்த்து, மனமிறங்கி மனமுருகி, இக்காலத்தின் இயல்புக்கு ஏற்ப நம் வாலிபர்களுடைய மனத்தில் எழுச்சியாகிஇருக்கின்ற தேச அபிமானத்தையும் உற்சாகமான மநோபாவத்தையும் நேர்மையான வழியில் முறைப்படுத்தச் சிந்தனைகொண்டு தீர்மானித்தார்.

2. காசி நகரத்தில் இச்சங்கமானது 1908ஞு அக்டோபர்மாசத்தில் ஸ்தாபிக்கப்பெற்றது. எந்த பெரிய நல்ல காரியத்துக்கும் பலவாறான இடையூறுகள் இருக்கின்றமை உலக வழக்கம் தானே! அவ்விதமே இந்தச் சங்கத்திற்கும் இடையூறுகள் பல இருந்தன. தாம் கொண்ட கொள்கையையே பிடிவாதமாகச்சாதிக்கின்ற சிலர், தம் நோக்கத்திற்கு சொற்பமேனும் மாறாக இருக்கின் விஷயத்தை எவ்விதமும் தடுக்கவேண்டுமெனக் கருதி, இச்சங்கத்திற்கு பலவித

மான தடைகளைச் செய்ய முயன்றனர். இச்சங்கத்தை ஸ்தாபித்தவர்களின்மேல் பலவாறான, தோஷங்களை ஆரோபணம் செய்தனர். அதிர்ஷ்டவசத்தால், இச்சங்கத்தை ராஜாங்கத்தின் உயர்ந்த உத்தியோகஸ்தர்கள் ஆதரித்தனர். கனந்தங்கிய வைஸிராய் (Viceroy) மின்டோபிரபுஅவர்கள் 1908ஹு டிசம்பர்மீ த்திலேயே, அன்பும் ஆதரவும்அமைந்தஒரு நிருபம், சங்கத்தின் தலைவரான மாதுஸ்ரீ அன்னி பெஸண்டு அம்மையாருக்கு எழுதியனுப்பினார்கள். இச்சங்கத்தின் உயர்நலம் பரவவேண்டுமெனவும், இனி வருங்காலத்தின் நேர்மையானது பெரும்பாலும் இக்காலத்தின் வாலிபர்களை நல்வழிப்படுத்தும் முறையைப் பற்றியதாக இருக்கிறதென்றும், பின்னும் சிலவிவரமாய், ஆசீர்வதித்து அவர்கள் எழுதியுள்ளார். சென்னை ராஜதானியின் கனம்தங்கிய கவர்னர் ஸர்ஆர்தர் லாலி என்பவரும், மைசூர் பரோடா முடிமன்னர்களும், இச்சங்கத்தைத் தாங்கள் அபிமானித்தும் தங்கள் தங்கள் ராஜ்ஜியங்களில் இச்சங்கம் அபிவிருத்திபெற வேண்டிய உபகாரங்கள் செய்வதாகத் தெரிவித்தும், தங்களுடைய திருநாமங்களையும் இச்சங்கத்தில் சம்பந்தப்படுத்திக் கொள்ளும்படி அனுமதியும் கொடுத்தார்கள். இராஜாங்க உத்தியோகஸ்தர்களின் ஆதரவு ஏற்படவே, சங்கத்திற்கு உண்டான விரோதிகள் குறைந்தனர். பெரும்பான்மையாய் ஆக்ஷேபணை ஒடுங்கியது. சங்கத்தின் முயற்சியும் தலைப்பட எத்தனித்தது. அதன் வேலையும் சுலபமாக நடைபெறுவதாயிற்று. அநேக நகர்களில் செல்வாக்குள்ளவர்கள் இச்சங்கத்தில் சேரவும், அதன் நோக்கங்களைக் கொண்டுசெலுத்தவும், முன்வந்தார்கள். விரோதிகளின் சாபம், சங்கத்திற்கு ஆசீர்வாதமாக முடிந்தது. சென்ற 1909ஹு டிசம்பர் மீ த்தில், சென்னை நகருக்கடுத்த ஆதியாரில் கூடிய பிரஹ்மஞான மஹாசபை நிகழும்காலத்தில் (Theosophical convention) அதற்குவந்திருந்த அநேகர், இச்சங்கத்தின் அங்கத்தினராகச்சேர்ந்தார்கள். மாதுர் பூமியாகிய இந்தியாதேசத்தின் க்ஷேமத்திற்குத்தங்களால் இயன்றளவில் நன்முயற்சி செய்கிறதாக உறுதிமொழியும் செய்தார்கள்.

3. இனி இச்சங்கத்திற் சேருகிறவரின் தகைமையைப் பற்றி சற்று விசாரிப்போம். இச்சங்கத்தின் அங்கத்தினராக ஆக அதிக

மான யோக்கியதைகள் வேண்டற்பாலனவையல்ல. அதன் உத்தர வாதங்கள் எவருடைய தகைமைக்கும் சக்திக்கும் உட்பட்டவை களே. உயர்ந்த படிப்புள்ளவர்கள் உயர்ந்த சாஸ்திரஞ்ஞர்கள் தான் இச்சங்கத்தின் அங்கத்தினராகக்கூடுமென்பதில்லை. ஏனையரும் கூடும். சங்கத்திற்கு ஏதேனும் திரவியசகாயம் செய்யவேண்டுமென்பது மில்லை. சேருகிறவர் இச்சங்கத்திற்குச் செய்யவேண்டியதெல்லாம் தம்மால் இயன்றமட்டில் யாதேனும் ஒருநலம் பயக்கும் கைங்கரிய மாகிய ஒரு தியாகமே. உறுதிமொழிப்பத்திரிகையிற் சொல்லியபடி தம்மாயுள்நாள்முழுவதும்பொதுஜனகைங்கரியத்தைத்தலைமேற்கொள்ளவும், பிறர்நலம் பயக்கும் கைங்கரியம் ஒன்றையேனும் நாள்தோறும் செய்தலுமாம்.

4. தேசத்திற்கு நன்மை பயக்கும் கைங்கரியம் செய்தல் என்ற உயர்பாவம் சாதாரண ஜனங்களின் மனத்திற் படாது. சாதாரண ஜனங்களின் மனோபாவத்திற்குள் வரமுடியாத உயர்தர எண்ணங்களைக்கொண்டு செலுத்துவதற்காக, உலகத்தில் உண்டான எத்தனையோ விவஸ்தைகளும் சத்சங்கற்பங்களும் நிறைவேறாமற் போயின என்பது சரித்திரவாயிலாக நாம் அறிவோம். அதனால் இச் சங்கத்தை ஸ்தாபித்தவர்கள் இத்தன்மையான பிழையைத்தவிர்த்து ள்ளார்; கைங்கரியமென்பது, வெளிப்படையான நலமுள்ள யாதே னும் ஒருதொழில், அல்லது, மனத்தால் கொள்ளும் யாதேனும் ஒரு நல்ல எண்ணமுமாம்; யாதொரு பிரதிபலனும் கருதாமல், பிறர்நலம் உண்டாக்கும் யாதேனும் ஒருசிறு அல்லது பெரிதான ஊழியம் அல்லது பணிவிடையாம்; பிறருக்கு நன்மையை உண்டாக்குதல் மாத்திரமே செய்பவன் கருத்தாக இருத்தல் வேண்டும் செயலின் அளவை முக்கியமன்று. செய்பவன் மனத்தின்கண், பிரதிபலன் கருதாத உயர்ந்த எண்ணம் இருக்கப்பாலது. இத்தன்மையான ஊழியம் செய்தலுக்கு சமயங்கள் ஒவ்வொருநாளும் நமக்கு நேரிடுகின்றன. இல்லை என யாரும் சொல்லமுடியாது. நாம் நம்முடைய சொந்தமான அற்ப சொற்ப விஷயங்களில் அழுந்தியிருக்கின்றோம்; அதனால், அச்சமயங்களை நழுவவிடுகின்றோம்; பின்பு, உற்றகாலத்தில் நல்லகாரியம் செய்யத்தவறினோமே என வருந்துகின்றோம். சென்றுபோன சமயங்கள் திரும்பா. மனத்தைக்கவரத்தக்க வீண

வார்த்தைகளும், பகட்டான உபந்நியாசங்களும், அலங்காரமான ஆரவாரமும்ஜன சமூகத்தில் நன்மை பயக்காவாம். அவைகளை மேன்மைப் படுத்தாவாம். செய்யும் உதவி அற்பமேனும், உதவிபுரிதலில், மன இளக்கமும், தம்மின் மெலியாரைக் கைதூக்கிவிடு முறையில் ஊக்கமும், இருத்தல் வேண்டும். இத்தகைய தியாககைங்கரியங்களால் தான்உலகத்தில் ஜனசமூகங்களின் நன்மையும் மேன்மையும்உண்டாகியிருக்கின்றன.

5. உறுதிமொழியில் ஒரு வசனத்தைப்பற்றி சிலர் ஆக்ஷேபிக்கின்றனர். "உயர்நலம் அமைந்த மனோரதங்களை தர்ம முறை பற்றியும் சட்ட முறை விலகாமலும் செய்பக்கடவேன்" என்ற வசனம் நம்மைவிட அறிவினும் உலக அனுபவத்திலும் மிக்கார் ஏற்படுத்தியது. சட்டமுறை விலகாமல் என்ற வசனம் அப்படியே இருத்தல் இக்காலத்தின் கருத்துக்கும் நோக்கத்திற்கும் இன்றியமையாதது. அறிவின்மையால் சிலர் சொல்லுவதாவது, இதுகாறும் சட்டமுறை விலகாமல் முயற்சிகள் செய்து வந்தோமே! என்ன பயனைக் கண்டோம்? அவைகள் எல்லாம் வியர்த்தமாயினவே! இப்படி நினைத்தல் சரியன்று. நலமன்று. இந்த புராதன தேசத்தின் உயர்நலம் அமைந்த நாகரீகத்தின் கம்பீரமான சம்பிரதாயங்களுக்கும், ஐதிகங்களுக்கும், முற்றும்மாறுப் தேசத்தில் கொடிய கலகங்களையும் குழப்பங்களையும் உண்டுபண்ணுதல் நேர்மையன்றே.

> மறந்தும் பிறன்கேடு சூழற்க
> சூழின் அறம் சூழும் சூழ்ந்தவன் கேடு.—(குறள்)

இக்கலகங்களையும் குழப்பங்களையும் உண்டுபண்ணக் கருதுகின்றவர்கள் மிகவும்சுருக்கமான பெயர்கள்தான். அவர்களும் சமீபத்தில்பொய்த்துப்போவார்கள். மேலும் உலக இயல்பு முன்போல இல்லை. காலகதிகள் சீக்கிரமாக மாறிக்கொண்டு வருகின்றன. முரட்டுத்தனம் போராட்டம், இவைமுதலிய தண்ட உபாயத்தினல் காரியங்கள் இக்காலத்தில் நடத்தப்படுகின்றன அல்ல. சமாதானம் என்ற சாம உபாயம் இக்காலத்தின்முதன்மையானதாகநடைபெறுகின்றது. "உலகமெங்கும் ஒருங்காய், மனிதர்களின் பொதுச்சபை" (the Parliament of man & Federation of the world) அமையும் காலமும்

உலகமெல்லாம் நேர்மையான தர்மமுறையில் நடைபெறுங் காலமும் இதுவரை, கவிகளின் மனப்பால் குடித்தல்என்ற கனவாக இருந்தன. அத்தர்மங்கள் அனுபவசித்தமாகும்படியானகாலம் மிகவும் சமீபித்து வருகின்றது. அதனால், முரட்டுத்தனத்தாலும் கொடிய கலகத்தாலும் காரியத்தைச்சாதித்துக் கொள்ளலாம் என்றஎண்ணமும், ஆங்கிலர்களை நம் தேசத்தினின்று துரத்திவிடலாம் என்ற எண்ணமும், பயித்தியமே! வீணே! ஆங்கிலேயர்களால் நாம் அடைந்திருக்கும் பிரயோஜனங்கள் ஏராளமானவை. அவைகளுக்கு நனி நன்றிபாராட்டக்கடமைப் பட்டிருக்கின்றோம்.

> "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
> செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்பது ஆன்றோர் வாக்கு. இச்சங்கத்தைச் சேர்ந்த அங்கத்தினர்கள், நம் தேசத்தின் நலத்தை தர்மமுறை பற்றியும், சட்டமுறை விலகாமலும், நேர்மையானவும், ஒழுங்கானவுமான உபாயங்களால் சாதித்துகொள்ளக் கருதுகிறார்கள். இத்தன்மையான முறையை அனுசரிக்க இஷ்டமில்லாதாருக்கு இச்சங்கத்தில் இடமில்லை.

6. சொற்பகாலத்திற்குள் இச்சங்கமானது இத்தேசமெங்கும் பரவியிருக்கிறது. நன்னம்பிக்கையும் உத்ஸாகமுமுள்ள நூற்றுக்கணக்கான அங்கத்தினர்கள் ஏற்பட்டிருக்கிறார்கள். பொது ஜனானுகூலமான காரியங்கள் அநேகம் ஆரம்பிக்கப்பெற்று வருகின்றன. இத்தேசத்தின் பிரகிருதஸ்திதியைநேர்மைப்படுத்தவும், நலப்படுத்தவும், அங்கத்தினர்கள் பலவாறாக முயற்சித்து வருகின்றார்கள். கடையராகத் தள்ளுண்ட கீழானஜாதியர்கள் கல்வி கேள்விகளால் நலம்பெறவேண்டுமென்பது, பொதுஜன சமூகத்தின் நன்மைக்கு முக்கியமானது. இதைப்பற்றி இச்சங்கத்தின் தலைவரான அன்னிபெஸண்டு அம்மையார் பலமுறை உபந்நியாஸங்கள் மூலமாய் வற்புறுத்திக்கொண்டு வந்திருக்கின்றார்கள். இக்கீழான ஜாதியார்களின் கல்விப்பயிற்சி சம்பந்தமான முயற்சிகள் இப்போது நடத்தப்பட்டு வருகின்றன. கைத்தொழில்செய்கின்றவர்களின் பிரயோஜனார்த்தமாக இராப்பள்ளிக்கூடங்கள் அநேக முக்கியமான இடங்களில் இச்சங்கத்தினரால் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

அன்னியதேசயாத்திரையிலும், சுதேஷபாஷைகளின்உயிர்ப்பிக்கையி லும், அபிவிருத்தியிலும், இவைபோன்றவிஷயங்களிலும், இச்சங்கத்தின் முயற்சிகள் நடைபெறுகின்றன. இன்னும் அநேக நல்லகாரியங்களை நடத்த இச்சங்கத்தினர் முயலுவார்கள். எல்லாக்காரியங்களும், எல்லா முயற்சிகளும் இந்தியர்கள் ஒருஜன சமூகமாக வேண்டுமென்ற ஒரே நோக்கத்தை முன்னிட்டு வைத்துக்கொண்டுதான் நிகழுவதாகும்.

7. இந்தியதேசதது ஸ்திரிகள் புருஷர்களுடன் சேர்ந்து அறிவுடன் கைங்கரியம் செய்தாலன்றி இத்தேசம் மேன்மையை அடையாது என்பது யாவரும் அங்கீகரிக்க வேண்டிய விஷயமே அதை யாவரும் மறுக்க முடியாது. இக்கருத்தைக் கொண்டே இந்திய புத்திரிகளின் சங்கம் ஒன்றும் ஸ்தாபிக்கப் பெற்றிருக்கிறது. இவ்விரண்டுசங்கங்களும் (புத்திரர் புத்திரி) கோவையாகச் சேர்ந்து நடபெறவேண்டுமென்பது உத்தேசம். கல்வி கேள்விகளால் அறிவு அகன்றவர்களும் செல்வாக்குள்ளவர்களுமான சில உயர்குல ஸ்திரீகள் மூலமாய் புததிரிகளின் சங்கங்கள் சிற்சில இடங்களில் ஏற்பட்டிருக்கின்றன. பம்பாய் பட்டணத்தில் சமீபகாலத்தில் அந்நிபெஸண்டு அம்மையார் செய்த பிரசங்கங்களால் இச்சங்கைத்தைப்பற்றி அங்குள்ளவர்களுக்கு உற்சாகமும் ஊக்கமும் உண்டாகி இருக்கின்றன. பம்பாய் ராஜதானியில் புத்திரிகளின் சங்கம் அதிக தீவரமாக விர்த்தியடையுமெனத்தோன்றுகிறது. இத்தேசத்தின் பிராசீனமான உயர்தர நாகரீக சம்பிரதாயங்களையும் குணதிசயங்களையும் கைநழுவவிடாமலும் அவைகளுக்கு நேர்மையாகவே இந்திய ஸ்திரீகளின் கல்விப் பயிற்சி நடைபெறவேண்டும். ஆங்கிலநாட்டில் இப்போது உண்டாகியிருக்கின்ற புருஷனுடன் உலகப்போராட்டங்களில் சமத்துவம்அடையபாராட்டிவருகின்றசண்டைக்காரிகளைப்போல நம்தேசத்து ஸ்திரீகள் ( suffragetts) ஆகாமல் கவனமாகப் பாதுகாத்தல் வேண்டும். இந்தியதேசத்தின் உண்மையானபுத்திரனும் புத்திரியும் மனப்பூர்வமாயும்நேர்மையாயும், தேசத்திற்குமேன்மையும் நன்மையும் உண்டாகும்படி, உழைக்கவேண்டும். "ஒருவரோடொருவர் இணக்கமாயும் சாந்தமாயும், தங்களுடைய பூர்ண சக்திகளுடனேயும், கவர்வமாயும் ஒருவர்மேல் ஒருவர் மரியாதையுடனேயும், உழைக்கவே'

ண்டும். அதனால் கிடைத்த பலனை பிறர்க்கு அளிக்கவேண்டும். அவர் அவர்க்குரிய நற்குண சம்பத்துக்களை விர்த்திசெய்யவேண்டும். பிறருடன் அன்புடனே உறவாடி ஒழுகவேண்டும். இதன் பயன் யாதெனில், இவ்வுலகமே சுவர்க்கலோகமாக திரும்பவும்விளங்குமன்றோ? சாத்விகமானவும் சாந்தமானவுமான கல்யாண சுபங்கள் உலகமெங்கும் பரவி விஸ்தரிக்குமன்றோ? மனுஷவர்க்கத்தின் மகுடம்போன்று, உயர்நலம் மலர்ந்த மனித சிரேஷ்டர்கள் உதயமாவார்கள்" இவ்விதமாக, விக்டோரியா சக்கரவர்த்தினியார்காலத்திய, கவிஞர் ஒருவர் தம்மனோபாவங்களை. வெளியிட்டிருக்கிறார்.

8. இளைஞர்களை உத்தேசித்து, அவர்களின் நன்மைக்காக ஏற்படுத்தியுள்ளது இச்சங்கம். அவர்களின் பொருட்டு சில விஷயங்கள் இப்போது சொல்லவேண்டியன. இச்சங்கத்தின் அங்கத்தினர்கள், உறுதிமொழிசெய்தவர், உறுதிமொழி செய்யாதார் என இரு வகையாராவார். உறுதிமொழி செய்யாதார் பாலியவித்யார்த்திகள் உறுதிமொழிசெய்த மூத்தோர்வார்த்தைக்குக்கட்டுப்பட்டு நடக்கற்பாலர். மூத்தோர் இவர்கள் தீயவழியிற் போகாமல் காப்பதுடன் இவர்களை நல்வழிப்படுத்தலும் வேண்டும். நம் தேசத்தில், மூத்தோருக்கும், இளைஞருக்கும் அவ்வளவு நேர்மையும் பொருத்தமும் இப்போதுஇல்லையெனச்சொல்லலாம். இதைமறைக்கமுடியாது. இளைஞர்களின் உத்ஸாகத்தையும், மனஎழுச்சியையும், துடிப்பையும், மட்டம் தட்டுதலும், தாழ்த்தலும் நலமென மூத்தோர் கருதுகிறார்கள். இதைப் பொறுக்கமாட்டாமல் இளைஞர்கள் மூத்தோர்பால், வணக்கம் மரியாதையின்றி ஒழுகுகிறார்கள். இவ்விருவருக்குள்ளும் நிகழும் மனநேர்மை இன்மையைத் தவிர்த்தலும், இளைஞர்கள்பால், மூத்தோரை அன்பும் ஆதரவுமாக விருக்கும்படி செய்வித்தலும், மூத்தோர்பால், இளைஞர்கள் வணக்கமாகவும், மரியாதையாகவும் ஒழுகச்செய்வித்தலும், இச்சங்கத்தின் நோக்கங்களில் ஒன்றாம். இத்தேசத்தின்கண் நடைபெறுகின்ற தீயவும் கொடியவுமான எண்ணங்களும், அனுஷ்டானங்களும், இனிப் பரவாமல் இச்சங்கம் தடுத்தும் அவைகளைத் தொலைத்தும் விடுமென்றும், இத்தேசம் தர்ம முறையிலும் சாந்தமுறையிலும் மேன்மேலும் நேர்மையாக அபிவிருத்தியடையும்படியாக, இச்சங்கம் ஒரு முக்கிய சாதனமாக ஏற்படுமென்றும் நம்புகிறோம். எல்லாம் வல்ல ஈசன் அப்படியே ஆகும்படி அருள்புரிவாராக.

ப. நா. எஸ். வி. சுப்பிரமணியம்.

## புத்தக வரவு.

---

### சிவராத்திரிப் புராணம் மூலமும் அரும்பத உரையும்.

இதன்மூலம் விருத்தநடையில் உள்ளது. யாழ்பாணத்திலிருந்த காசி அ. வரதராஜ பண்டிதரவர்கள் இயற்றியது.

இப்புராணத்தில் சிவராத்திரி உற்பவமும், மாக சிவராத்திரி, யோக சிவராத்திரி, நித்திய சிவராதிரி, பட்ச சிவராத்திரி, மாத சிவராத்திரி, என்னும் ஐந்துவகைச் சிவராத்திரிகளின் விவரமும்; அவற்றுள் உத்தமத்திலுத்தமசிவராத்திரி, உத்தம சிவராத்திரி, மத்திம சிவராத்திரி, அதம சிவராத்திரி, என்பவைகளின் விவரமும், அவைகளை யனுஷ்டிக்கும் கால நிர்ணயமும்; அங்ஙனம் அனுஷ்டித்துப் பயனடைந்த சுகுமாரன், அங்குலன், சவுமினி, கன்மாடபாதன், விபரிசன், குபேரன், சாலிகோத்திரன் என்னும் எழுவர் சரிதங்களும் மிகத்தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. சிவராத்திரி என்றால் என்னை? அதன்உற்பத்தி எப்படி? எனச் சிலர் கேட்குங் கேள்விகட்கு, சுலபமாய்ப் பதிலளிக்குந் தன்மையைத் தரக்கூடியது,

மதராஸ் ரிவின்யூ போர்ட் ஆபீஸில் கிளர்க்குவேலையில் இருக்கும் மா° நமசிவாயம் பிள்ளை அவர்களால் ஷை புராணம் நன்றாய் பரிசோதிக்கப் பெற்று, அரும்பிரயோக உரையுடன் அச்சிடப்பட்டிருக்கிறது. இப்புராணம் 9-சருக்கங்களாக வகுப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு சருக்கத்தின் இறுதியில், அச்சருக்கத்தின் விஷயம் எளிய தமிழ் வசனநடையில் ஷை நமசிவாயம் பிள்ளைஅவர்களால் எழுதப்பட்டிருக்கிறது. ஒவ்வொருசைவ சமயியும் இப்புத்தகத்தை படிக்கவேண்டுவது. அதனால் பக்திஉண்டாம். உயர்வான பதிப்பை உத்தேசித்து, இதன்விலை 1—4—0—அதிகமாக இல்லாவிடினும் காலசத்தியை உத்தேசிக்க இதன் விலையைக்குறைக்கலாம்.

மேற்குறித்த புத்தகம் வேண்டுவோர் சென்னை, சேப்பாக்கம் திருவேட்டீசுவரன்பேட்டைரோட்டு 10-வது எண்ணுள்ள வீட்டில் மா-நமசிவாயம் பிள்ளையவர்களிடத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

**ஸ்துதிமஞ்சரி**—இது திருச்சினப்பள்ளியில்; நாஷனல் ஹைஸ்கூலில், பத்திமார்க்க போதக உபாத்தியாயர், பிரஹ்ம்ஸ்ரீ தி. ஸாம்பவமூர்த்தி சாஸ்திரிகளால், ஈசுவரசம்பந்தமான ஸ்தோத்திரங்களை சிறுவர்களுக்கும், சிறுமிகளுக்கும் பயன்படும்படியாக தொகுத்துள்ளது. கர்ணாமிருதம், பிருஹத்ஸ்தோத்திரரத்னகரம், முகந்தமாலை, தேவாரம், திருவாசகம், நாலாயிரப்பிரபந்தம், இவைமுதலான கிரந்தங்களிலிருந்து பாசுர

ங்களைச்சங்கிரகித்து எடுத்துச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இப்புஸ்தகம் நம்முடைய ஆண் பெண் பிள்ளைகள் பள்ளிக்கூடங்களில் உபயோகிக்கவேண்டியது. பால்யத்திலேயே ஈசுவரபக்தியின் வித்துப்போடல் நலம். அதற்கு இப்புத்தகம் மிகவும் சாதகமானது. இதன் விலை 4-அணு தான். ஒவ்வொரு, உபாத்தியாயரும் இப்புஸ்தகத்தில் உள்ள சுலோகங்களையும் பாக்களை நன்ருய்ப் பண்ணுடன் மனனம் செய்து, அவைகளின் அர்த்தத்தையும் விசாரித்துத்தெரிந்துகொண்டு, தம்மிடம் ஒப்புவிக்கப் பெற்றிருக்கிற குழந்தைகளுக்கு அவைகளைப் போதிப்பாரேயாகில். அதனல் அவர்களுக்கு சுகிர்தம் உண்டு, அவர்களுடைய கடமையுமாம்.

**சத்தியவல்லி**—இஃது ஓர் சிறந்தகற்பனைக்கதை. இது மகா-ா-ா-ஸ்ரீ R. P. குழந்தைசாமிபிள்ளை BA. LT. அவர்கள் இயற்றியது. இது அழகான எளியதமிழ்நடையில் உள்ளது. படிப்பவர்மனம் உருகக்கூடியதாக இக்கற்பனை நிகழ்வது. இதைவாசித்துக்கொண்டிருந்த ஒருவர் கண்ணும் கண்ணீருமாக இருந்தார். ஏன் என்றுவினவ, கதாநாயகி பட்டதுன்பமும் அனியாயமான கஷ்டமும், தன்மனம்சகியாமல், கண்ணீர்விட்டு ஆறுதல் அடைந்தார். நம்முடைய ஸ்திரிகள் இப்புத்தகத்தை வாசிப்பார்களகில் மனத்தூய்மைபெறுவார்கள். மீதியும் நன்ருகும். இப்புத்தகம் மைலாப்பூர் ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனியாரால் நேர்த்தியாக அச்சு இயற்றப் பெற்றிருக்கிறது, இதன் விலை, அணு, 12- அதிகமெனத் தோன்றுகிறது.

**ஆரிய ஜனபோதினி**, இது நம் தேசமானது நலம்பெறக்கருதி, அதன் நிமித்தம் நம்முடைய ஜனங்களுக்குள் உத்ஸாகத்தையும் ஊக்கத்தையும் உண்டுபெண்ணக்கூடிய விரிந்த உபந்நியாசம். திருநெல்வேலி ஜில்லா கல்லிடைக்குரிச்சி வா. முத்துக்கிருஷ்ணய்யரால் இது இயற்றப்பெற்றது. இது எளிய தமிழ்நடையில், சந்தியின்றி யாவருக்கும் பயன்படும்படியாக எழுதியுள்ளது, சொல்நயம், பொருள்நயம், பலபொது விஷயம் நிரம்பியுள்ளது. அச்சுயியற்றியிருப்பதில். ஒரேதொடர்பாகவில்லாமல், பாரா, பாராவாக வகுத்திருந்தால், இப்புஸ்தகத்தின் பிரயோஜனம் இன்னும் அதிகமாக இருக்கும். இதன்விலை, 10-அணு காலத்தை உத்தேசிக்க, இது அதிகம்.

**இந்துசாஸ்திராபிமானி**-: இது ஒருசிறுபுஸ்தகம். இது **லோகோபகாரி** என்னும் தமிழ்ப் பத்திரிகைக்கு கல்லிடைக்குரிச்சி மகா-ா-ா-ஸ்ரீ வா. முத்துக்கிருஷணய்யர் அவர்கள் பலசமயத்தில் எழுதிய துண்டுப் பிரசுரங்களை ஒருங்குசேர்த்துள்ளது. யாவரும்படித்து ருசிக்கும்படியாக சாதாரணத்தமிழில் இது எழுதப்பட்டிருக்கிறது. இதன்விலை அணு 5 தான்.

## பத்திரிகை வரவு.

இக்காலத்தில் தமிழ்ப்பத்திரிகைகள், மேன்மேலும் வெளிவந்துகொண்டிருக்கின்றன. கல்விகற்பிக்கும் சாதனங்களில், பத்திரிகைகள் முக்கியமானவை. 1. விவேகசிந்தாமணி, 2. விவேகபோதினி, 3. விததியாபாநு, 4. செந்தமிழ், 5. பிழைக்கும்வழி, 6. வைத்தியபோதினி, 7. சக்கிரவர்த்தினி, இவைகள் மாதாந்தபத்திரிகைகள்; அதது தலைமேற்கொண்ட அபிப்பிராயங்களையும், நோக்கங்களையும், ஜனங்களுக்குப் பயன்படும்படியாக, வியாசங்கள் ரூபமாகவும், சிறுகுறிப்புகள் மூலமாகவும் தெளிவாய் நல்ல தமிழ்நடையில் அனேகமாக எல்லாம் எழுதப்பட்டு பிரசுரமாகிவருகின்றன. இவைகள் பெரும்பாலும் திரவியலாபத்தைக்கருதி பிரசுரமாகிவருகின்றதாக நினைக்கற்பாலதன்று. லோகோபகாரார்த்தமாகவே இவை நடைபெறுகின்றன. ஜனசமூகத்தின் பொது அறிவும், பொதுச்சீலமும் உயர்வுள்ள பதவியைப் பெறும்படியாக நம் பத்திரிகைகள் இன்னும் அதிகமுயற்சி எடுத்தல் வேண்டுமென்பது பிரார்த்தனை.

The Light of truth or the Sidhanta Deepika and Agamic Review:—என்று ஆங்கிலப்பத்திரிகையில், இப்போது சிலமாசங்களாக, ஆகமவிஷயங்களைப்பற்றிய முக்கியமாக சைவ ஆகமவிஷயங்களைப்பற்றிய வியாசங்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. வேதம், ஆகமம், என்பவை ஈசுவரனை அறிவதற்கு இரண்டுகண்கள். ஞானமார்க்கத்தின் அனுபவிஷயங்கள் ஆகமசாஸ்த்திரத்தின் மூலமாய் எளிதாய் அறியத்தக்கன. உண்மையில் வைதீகர் லௌகீர் எல்லாரும் ஆகமசாஸ்திரங்களின்அனுஷ்டானங்களே செய்துவருகின்றோம். சந்தியாவந்தனம் என்ற ஒருகிரியைதான் எல்லாரும் அனுஷ்டிக்கிறார்கள் இது ஒன்றுதான் ஸ்ரௌதகிரியை, சிரார்த்தம், ஸ்மார்த்தக் கிரியையாம். அக்கினி ஹோத்திரம், இஷ்டிகள் யக்ஞங்கள் இக்காலத்தில் பெரும்பாலும் இல்லை. சிவவிஷ்ணு ஆலயங்கள், எங்கேபார்த்தாலும் உள்ளன, அவைகளில்எல்லா ஆராதனைகளும் அனுஷ்டானங்களும் ஆகமசாஸ்திரங்களை அனுசரித்தே நிகழ்கின்றன. இப்பத்திரிகை ஆகமசாஸ்திரத்தின் முக்கியத்தைப் பற்றி வற்புறுத்தி வருகின்றது. இதுநியாமே. மகா-௱-௱-ஸ்ரீ- V. V. ரமணசாஸ்திரிகள் இதன் பத்திராதிபர். ஆங்கிலம் ஸம்ஸ்கிருதம் இரண்டிலும் மஹா பாண்டித்திய முள்ளவர். இவர்கள் சம்பந்தத்தினால் இஃது இனி இன்னும் உயர்நலம் பயக்கும் உயர்தரப் பத்திரிகையாக்ஏற்படுமென மதிக்கின்றோம்.

பத்திராதிபர்.

---

# சமாசாரக்கொத்து.

நாகபட்டினத்தில் மகாதேவரது பெரியஆலயத்தில் கீழ் வெளிப் பிரகாரத்தில் ஒரு யோகீசுவரர் சமாதியிலிருக்கிறார். பத்துமாதகாலமாக அன்ன ஆகாரமின்றி ஒரேஇடத்தில் சமாதியிருக்கிறதைக் கண்கூடாகக் கண்ட ஒருவர் மூச்சுச் சிறிதுமில்லையென்று கூறுகிறார். இக்கலியுகத்தில் இம்மாதிரியான சம்பவம் அரிதினும் அரிது. சதாசிவப்பிரமம் முதலான மகான்கள் இவ்வாறு இருந்து யோகசாஸ்த்திரத்தின் உண்மையை உலகத்துக்கு விளக்கியிருக்கிறார்கள். இவ்வற்புதத்தைக் கண்டபின்னாவது யோகத்தில் அவநம்பிக்கை யுள்ளவர்கள் அதனை நம்புவார்களென்று எதிர்பார்க்கிறோம்.

ஸமஸ்கிருத பாஷையைச் செத்த பாஷையாகக் கருதுகின்றனர் பலர். இதுசரியான அபிப்பிராயமாகாது. அதற்குகாரணம் அதுபேசப் படாததே என்கிறார்கள். அதைப்படித்தவர்கள் ஒன்றுகூடி வித்தியா விஷயமான ஆராய்ச்சி செய்யுங்கால் அப்பாஷையிலேயே பேசிவருவதால் அது செத்தபாஷையாக மாட்டாது. நவராத்திரி உற்சவகாலங்களில் இராஜசபைகளில் நம் வித்வான்கள் வேதாந்தம், தர்க்கம் முதலிய சாஸ்திர சம்பந்தமான வாதஞ்செய்யுங்கால் ஸமஸ்கிருதத்திலே பேசிவருவதை நாம் நேரிற்பார்த்தும் இப்பாஷை செத்தபாஷையென்று கூறலாமா? நம் சர்வகலாசாலையார் இதன் அபிவிருத்திக்குக்கேடுண்டாக்கின போதிலும் இங்கிலாந்தில் இம்மாண்புள்ள பாஷையை ஸிவில் உத்தியோகஸ்தர்களுக்குக்கட்டாயப் பாடமாக அமைக்கவேண்டுமென்று சிலர்வாதாடிவருகிறார்கள். இந்தியாவின் ஏற்றத்துக்கு ஸமஸ்கிருத பாஷையே காரணம். அதிலேயே நம்கருந்தனமெல்லாம் புதைந்து கிடக்கின்றன. நம் தேசம் முன்னுக்கு வரவேண்டுமானால் ஸமஸ்கிருத பாஷையின் அபிவிருத்தி இன்றியமையாதது. அதைச்சரிவரக் கற்காதவர்களுக்கு நம் மதத்தின் உயர்வு புலப்படாது. ஆகையால் நம்மவர் எவ்வாறு சிரமப்பட்டாவது இவ்வுத்தம பாஷைப்பயிற்சியை அபிவிருத்தி செய்தல் வேண்டும். இதனை உணராமல் வீண்வாதாடி வழக்குரைத்தலாற் பயனில்லை.

**பரோடா ராஜ்யத்தில்** நாளுக்குநாள் கல்வி அபிவிருத்தியாகி வருவதைக் கேட்க மிக்க மனமகிழ்ச்சியுண்டாகிறது. அதற்கு முக்கிய காரணம் அந்நாட்டின் அரசரது கல்வியும் நாகரிகமும் தாராள சிந்தையுமே. கிராமந்தோறும் சர்க்கார் செலவில் புத்தக சாலைகளும் பத்திரிகாசாலைகளும் ஏற்பட்டுவருகின்றன. அவ்விராஜ்யத்தில் தற்காலம் 172புத்தகசாலை

கள் இருக்கின்றன. ஒவ்வொருபுத்தகசாலைகளிலும் குறைந்தபக்ஷம் 225ரூ. பெருமான புத்தகங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. கிரந்தகர்த்தர்களிடம் இருந்து 3000ரூ. செலவுசெய்து புத்தகங்கள் இவ்வருஷத்தில்வாங்கிவைத்திருக்கிறார்கள். பாஷாந்தர புத்தகசாலைப் புத்தகங்கள் 45புத்தகசாலைகளுக்கு தனங்கள்கொடுபட்டிருக்கின்றன. இப்புத்தகசாலைகளில் இந்த வருஷத்து ரிபோர்ட்டுபடி சுமார் 30000ரூ. புத்தகங்களிருக்கின்றனவாம். இவை கிராமபுத்தகசாலைகள். நகரபுத்தகசாலைகளில் இலக்ஷக்கணக்கான தொகை மதிப்புள்ள புத்தகங்கள் இருக்குமென்பது திண்ணம். புத்தகசாலைகள் மூலமாகவே அறிவைப்பரவச் செய்தல்வேண்டும். அமெரிக்கா, ஜர்மனி, ஜபான், இங்லாந்து, பிரான்ஸ், முதலிய தேசங்களினுடைய நாகரீகத்துக்கும் அறிவுக்கும் புத்தகசாலைகளும் ஒரு முக்கியகாரணம் என்பது மறுக்கொணா விஷயம்.

நம் சுதேசஅரசர்களுடைய நாடுகளில் ஜாம்கந்தி என்ற ஒருசிறநாடு தென்மகராஷ்டிர தேசத்திலுண்டு. அதன் பரப்பு 524-மைல். இலட்சம் குடிகள் அதிலுண்டு. இச்சிறுநாட்டில் 72 பாடசாலைகள் இருக்கின்றன. 500 ஜனங்களுள்ள ஒவ்வொருகிராமத்திலும் ஒருபாடசாலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. சிலபாடசாலைகளில் படிப்பு இனமாகவே சொல்லிக்கொடுக்கப்பட்டுவருகிறது. சிலபாடசாலைகளில் சாப்பாடுபோட்டுப் படிப்புச்சொல்லிக் கொடுக்கிறார்களாம். ஏழைகளுக்கு இவ்வாறு செய்யவேண்டுவது பரமஉபகாரம். வித்தியாதானத்தினும் மேலான தானம் கிடையாதென்பது நம் பெரியோர்களின் கொள்கை.

சுருசயத்தினால் எழுதுகோல்கள் செய்வது நம்நாட்டினும் சிறிது ஏற்பட்டிருப்பதைப்பற்றி அறிந்து சந்தோஷிக்கிறோம். கல்கத்தாவுக்குச் சமீபத்தில் டாலிகன்ஜ் என்னும் இடத்தில் இதுவிஷயமாய்ஒரு சிறுகம்பெனி ஏற்பட்டு வேலைசெய்து வருகிறது. இதற்குமுதல் ரூ 46,000. அங்குள்ள யந்திரத்தால் 120குரோஸ் பென்சில்கள் உண்டாக்கப்படலாம். 120குரோஸ் (17,280 பென்ஸில்) ஆனால், தற்காலம் 5760 பென்ஸில்கள்தான் ஒருநாளில் உண்டாக்கப் படுகின்றனவாம். இது அபிவிருத்தியானால் இந்தியா முழுவதுமுள்ள பள்ளிக்கூடங்களுக்கும் போதுமான பென்ஸில்கள் கொடுத் துதவலாம். இது வர வர விருத்தியாகி நம் நாட்டுக்கு நன்மைசெய்யும் என்று நம்புகிறோம்.

"இந்தியாவில் நிலக்கரி வங்காளத்திலும், மத்திமமகாணங்களிலும், ஆஸாம், பேலுசிஸ்தான் முதலிய இடங்களில் முக்கியமாய்வெட்டியெடுக்கப்படுகின்றது. சென்றவருஷத்தில் 11,294,227 டன் நிலக்கரி வெட்டியெடுக்கப்பட்டது. அதில் வங்காளத்தில் 100-க்கு 94-பங்கு வெட்டிஎடுக்

கப்பட்டது. வங்காளத்திலுள்ள ஜாரியாவில் வெட்டியெடுக்கப்பட்ட நிலக்கரி சொற்பம் இவ்வருஷம் குறைந்துவிட்டது. மற்ற இடங்களில் அதிகம் வெட்டி யெடுக்கப்பட்டபடியால் மொத்தம் சரிக்கட்டிவிட்டது.

அப்ரஹம், ஹாசாரிபாக் என்னும் இடத்தில் ஏராளமாய்அகப்படக் கூடியது. இதைச் சரிவர வேலை செய்யும்பக்ஷத்தில் ஏராளமான லாபம் அடையலாம். சென்றவருஷத்தில் அதற்கு முந்தின வருஷத்தினும் 709 டன் குறைவாக வெட்டி யெடுக்கப்பட்டிருக்கிறது.

தங்கம் முக்கியமாக வெட்டி யெடுக்கப்பட்டஇடங்கள் மைசூரி லுள்ள கோலார் கோயம்புத்தூரிலுள்ள வைநாடு அனந்தப்பூர், டார்வார் முதலியவை. சென்றவருஷம் 5615 ஔன்ஸ் தங்கம் எடுபட்டது. அதற்கு முன்வருஷம் 7,242 ஔன்ஸ் எடுபட்டது.

தகரம் பர்மாவில் அகப்படுகிறது. சென்றவருஷம் 1520 அந்தர் அகப்பட்டது. மங்கானிஸ் என்னும்உலோகம் சென்றவருஷத்தில் மூன்றரைலக்ஷம் டன் அகப்பட்டது. நம் நாட்டில் இவ்வுலோகம் உயர்ந்ததாக அகப்படுகிறது. வெட்டியெடுப்பது அதிக செலவு இல்லை. தக்க முயற்சி செய்துவந்தால் தகுந்த இலாபம் கிடைக்கும்.

**ஒரு வித்தியாசாலைக்கு நன்கொடை:**—டிப்டிகலெக்ட்டர்வேலையிலிருந்து உபகாரசம்பளம்பெற்ற **மிஸ்டர் கிருஷ்ணஜி பாண்டுரங்கஜோஷி** என்ற கனவான் பூனா பெர்கூஸன் கலாசாலைக்கு ரூ 12,000 நன்கொடை கொடுத்தார் என்று கேட்டு மிகவும் மகிழ்வுறுகிறோம். இம்மாதிரியான வித்தியாவிஷயமான தானமே ஒருவருக்கு மிகவும் சுகிர்தத்தைக் கொடுக்கக் கூடியது.

ஈரலில் எரிச்சல்வியாதி யுண்டானால் அதைப் புதுமாதிரியான சிகிச்சையால் அபாயமின்றிக் குணமாக்கலாம் என்று **நியூயார்க்கின் செயின்ட்பிரான்ஸிஸ்** வைத்தியசாலையிலுள்ள ஒரு வைத்திய சிரேஷ்டர் கண்டுபிடித்திருக்கிறாராம். அஃதாவது சூட எண்ணெயைசர்மத்துள்வழியாய் பன்னிரண்டுமணிக்கு ஒருமுறை, அதுசொஸ்தமாகும்வரை செலுத்திவந்தால் குணமாகிறதாம். இப்புதுமுறையால் ஒருவரும் சாகிறதில்லையாம். நாளுக்குநாள் வைத்தியமுறை மேனாட்டில் அபிவிருத்தியாகிவர நாம் நம் பழைய நல்லமுறைகளையும் அநுஷ்டியாமல் தூங்கிவருவது விந்தையினும் விந்தையன்றோ?

**கங்காஜலத்தின் மகிமை:**—நம்நாட்டார் கங்காதீர்த்தத்தின் மகிமையை யுணர்ந்து சாகிறதற்குள் ஒருமுறையாவது போய் அதில் ஸ்நானம்

பண்ண முயல்வார்களென்பது உலகப்பிரசித்தமானது. மேனாட்டுச்சாஸ்திர நிபுணர்களும் இதன் மகிமையை உணர ஆரம்பித்திருக்கிறார்கள். மிஸ்டர் இ. எச். ஹென்கின் என்பவர் கங்காஜலமானது விஷபேதிப்பூச்சி அபிவிருத்தியைத்தடுக்கக்கூடியதென்றும் அதிலிருக்கிற ஒருவகைப்பதார்த்தம் அப்பூச்சிகளைக் கொன்றுவிடுகிறதென்றும் கூறுகிறார். சிலவருஷங்களுக்குமுன்ஒரு ஜர்மன்டாக்டர்இப்புனிதநீரின்மகத்துவத்தைப்பரிசோதித்து இதேமாதிரி எழுதியிருப்பதைப் பத்திரிகை வாசித்தவர்கள் அறிவார்கள்.

இவ்வருஷம் பிரமஞ்ஞானசபையின் வருஷாந்தரக்கூட்டம் சென்னை அடையாற்றின் மாளிகையில் அடுத்த டிசம்பர்மாதம் கூடும். அச்சமயம் காசி கலாசாலைப் பிரதம உபாத்தியாயராகிய மிஸ்டர் அரன்டேல் என்ற வித்வான் The growth of National consciousness in the light of Theosophy என்ற விஷயத்தைப் பற்றி ஆங்கிலத்தில் உபந்நியாசங்கள் புரிவார்.

ஹரித்துவாரத்துக்குச் செல்லும்வழியில் கான்கல்என்றஓரிடத்தில் சுவாமி கல்யாணந்தர் என்ற ஒருவர் சாதுக்களுக்கு வைத்தியசகாயம்செய்து வருகின்றனர். ஹரித்துவாரத்திற்குப்போகும் பல்லாயிரம் ஜீவர்கள் இவருடைய காருண்ய உபகாரமபெற்றுச் சுகமடைந்து வருகின்றனர். இந்த சுவாமிகள் 1900-ம்வருஷம் இராஜபுதனத்தில் நேர்ந்த பஞ்சத்தில் ஜனங்களுக்குப் பேருபகாரம் புரிந்தவர். ஜாதிமத வித்தியாசமின்றி, எக்குலத்தாருக்கும் எவ்வகுப்பாருக்கும் ஜீவகாருண்யத்தை முன்னிட்டு இவ்வரிய உபகாரம் சென்ற பத்தாண்டுகளாகப் புரிந்துவருவதால் இத்தர்மவிஷயத்துக்கு உதவிபுரிய விரும்புகிறவர்கள் ஷஹரான்பூர்ஜில்லா ஹரித்துவாரம்கான்கல் ஆச்சிரமத்திலிருக்கும் இந்தச் சுவாமிகள் விலாசத்துக்கு அனுப்பலாம். சென்றஆண்டு பதினாயிரம் நோயாளிகள் உதவிபெற்றுச் சுகமுற்றார்களாம். இப்படிப்பட்ட பரோபகார ஜன்மமே ஜன்மம்.

## மிஸ்கிரைஸ்டி, காகராணி, மிஸ்டிக்ஸன்அவர்கள் மதுரைக்குவிஜயம்.

அக்டோபர்மீ 10உ முதல் 14உ வரை சென்னைஅடியார் பிர்ம்மஞான சபையைச் சேர்ந்த மிஸ்கிரைஸ்டி அம்மாளும் காகரீன்ராணி மிஸ்டிக்ஸன் அம்மாளும் இவிடம் மதுரையில் பிரம்மஞானசபை மந்திரத்தில் தங்கியிருந்தார்கள். மிஸ்கிரைஸ்டிஅம்மாள் 3 உபந்நியாசங்கள் மதுரை மகாஜனங்களுக்கு சேதுபதிஹைஸ்கூலில் செய்தார்கள். ஷை உபந்நியாசங்கள் மிகவும் சாரமுள்ளவைகளாக இருந்தன. நம்முடைய பெண்பாலர்கள் ஷை உபந்நியாசங்களைக்கேட்டு மேற்றிசைஸ்திரீகள் இத்தன்மையுள்ளவர்களென்றுதெரியக்கூடாதநிலைமையிலிருப்பதைப்பார்க்க மிகவும்பரிதாபமாகஇருக்கிறது.

முதல்நாள் உபந்யாசத்தில் நமது தர்சனங்களில் சொல்லப்பட்டிருக்கிறதான "பிர்மமாண்டமும் பிண்டாண்டமும் ஒன்று" என்னும் விஷயத்தைப்பற்றி நன்றாய் உபந்யாசம் செய்ததில் முக்கிய கருத்தாக ஷை தத்வத்தின் அர்த்தத்தை விபரீதமாக கிரகித்து ஜீவருக்குள்ள கிஞ்சிஞ்ஞதை முதலிய குறைகளை ஈசுவரனுக்கு கற்பித்து சனாதன தர்மத்தினின்றும் வழுவிக்கெட்டுப் போகிறவர்களென்றுவற்புறுத்தினர். இரண்டாவது உபந்யாசத்தில் உலகமெங்கும் கொடிபோல் படர்ந்து பின்னியிருக்கிற பிரம்மஞான சபையின் கருத்துக்களை விவரித்தார்கள். ஷை சபையின் முக்கியகருத்தான சகோதரபாவம் நாளுக்குநாள் வேரூனறி வீருகிறதென்றும், சீக்கிரத்தில் வரப்போகிற அவதாரத்துக்கு பேருதவியாக ஏற்படவேணுமென்றும், ஷை சகோதரபாவம் பரவுவதற்கு முக்கிய ஆதரவாக ஏற்படக்கூடியதாகையால் ஷை சபையின் மற்ற கருத்துக்கள் ஏற்பட்டிருக்கிறதென்றும் சொன்னார்கள். மூன்றாவது உபந்யாசத்தில் ஆஸ்தம்ப பிர்ம்மபரியர்தம் ஜீவராசிகள் படிப்படியாக உயர்ந்த பதவியை அடைந்து வருவனவென்றும், சகல ஜீவன்களுக்கும் கடைமுறையில் மோக்ஷம் யென்பது சித்தமானாலும், மனுஷ்யகோடியில்ச்சேர்ந்த நாம் புத்திபூர்வமாக பிர்ம்ம ஐக்கியத்தை அடைய முயலவேண்டியது அவகியமென்றும்; ஆனதால் அதற்குசாதனமாக ஏற்பட்டிருக்கிற கர்ம பக்தி ஞானம் யென்றமுறைகளைவிடாது கைப்பற்றவேண்டுமென்றும் சொன்னார்கள்.

பிறகு 13ௐ சாயங்காலம் நம்முடைய ஸ்ரீ மீனாட்சி வித்தியாசாலைப் பெண்களுக்கு காகரீன் ராணி அவர்கள் பரிசளித்து பெண்கல்வியைப் பற்றிப் புகழ்ந்துபேசி 14ௐ இம்மூவரும் திருச்சினாப்பள்ளிக்குப் புரப்பட்டுப் போனார்கள்.

## வைதீகமுறையான நாவாயாத்திரை.

பம்பாய் நகரில், கோவர்தன்தாஸ் கோகல்தாஸ் என்ற ஒரு வியாபாரி இருக்கின்றார். அவர் ஐரோப்பா கண்டத்திற்கு, வைதீக ஆசாரமுள்ள ஹிந்துக்கள். ஷை ஆசாரங்களுக்கு எவ்வித குறைவும் நேரிடாமல் கப்பல் யாத்திரையை நம்மவர்கள் நடத்தும்பொருட்டு ஒரு புகைக்கப்பல் வாடகைக்கு அமர்த்தி யிருக்கின்றார். 1911-ஷு மார்ச்சு-மீ௳ த்தில் ஷை கப்பல் யாத்திரை ஆரம்பமாகும். எடன், கெயிரோ ஆத்தன்ஸ், இத்தாலியா, பிரான்சுதேசம், இங்கிலாண்டு, ஜர்மானியா முதலான நாடுகளுக்கு, இந்த யாத்திரைக்காரர்கள் போவார்கள். மாக்ஷிமைதங்கிய சக்கரவர்த்தியின் பட்டாபிஷேகத்தை முன்னிட்டு இந்த யாத்திரை நிகழும். 40 பிராஹ்மண சமயல்காரர்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். கப்பலில் தனிமையாக சமயல் செய்வதற்கும்வேண்டியவை ஏற்படுத்தப்படும். நம்முடையகிரகத்தில் இருக்

இன்றமைபோல எல்லா சௌகரியங்களும் ஏற்படும். இனம் ஒன்றுக்கு, சாப்பாட்டுச்செலவு உள்பட ரூ. 2500, கேள்வு கொடுக்கவேண்டும். இந்நாவா யாத்திரையால், அநேக நன்மைகள் உண்டாகுமென சிலர் அபிப்பிராயங் கொள்ளுகிறார்கள். சில மடாதிபதிகளும் யாத்திரைக்காரர்களாக ஏற்படும் விஷயத்தில் அதிக நலம் உண்டாம்.

## ஸ்ரீ மீனாட்சி வித்தியாசாலை ஐந்தாம் வருஷத்திய மஹோத்ஸவம்.

மதுரைப் பிரஹ்மஞான சபையாரால் நடத்தப்பெறும் இவ்வித்தியாசாலையில் கற்கும் மாணாக்கர்களுக்கு வெகுமதியளிப்பும், ஷை வித்தியாசாலையின் ஐந்தாம்ஆண்டு மஹோத்ஸவமும் சென்ற அக்டோபர்மீ 12உ புதன்கிழமை சாயந்திரம் மதுரை சேதுபதிஹைஸ்கூல் ஹாலில் கொண்டாடப்பட்டது. நியூஜீலந்துதீவிலிருந்து இந்தியாவுக்குவந்து இந்தியாவில்பிரஹ்மஞானசங்கத்திற்காக பல இடங்களில் பிரசங்கம் செய்துவருகிற மிஸ். W. கிரிஸ்டிஅம்மாள் அக்கிராசனாதிபதியாக வீற்றிருந்து அந்த உத்ஸவத்தை நடத்தினார்கள். அமெரிக்காகண்டம் ஐக்கியமாகாணத்திற் பிறந்து ருஷ்யாதேசத்துப்பிரபுவை மணம்புரிந்து இந்தியாதேசத்தில் பிரஹ்மஞானசங்கத்திற்காக உழைத்து வேலை செய்துவரும் பிரின்ஸஸ் காகரீன் (Gagarin) என்னும் பெருமாட்டி மாணாக்கர்களுக்கு உரிய வெகுமதிகளை அளித்தார்கள். ஆஸ்திரேலியாவில் ஒரு பெரிய ஆஸ்பத்திரியில் வியாதியஸ்தர்களுக்கு உதவிபுரியும் (Nurses) தாதிகளைக் கற்பித்துக்கொடுத்து தற்காலத்தில் அடையார் பிரஹ்மஞானசங்கத்தில் வசிக்கும் மிஸ். டிக்ஸன் அம்மாளும் வந்திருந்தார்கள். 1909ளுடத்திய ஷை வித்தியாலையின் ரிப்போர்ட்டானது அந்த வித்யாசாலையின் காரியதரிசி அவர்களால் வாசிக்கப்பட்டது. 1909ளுடத்தில் 250 மாணாக்கர்கள் ஷை வித்யாசாலையிற் கற்றுவந்தார்கள். பாலர் வகுப்புமுதல் மூன்றாவது பாரம்வரையில் ஷை வித்யாசாலையில் வகுப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. பாலர்வகுப்பில் இரண்டு பிரிவுகளும் முதலாவதுவகுப்பில் இரண்டுபிரிவுகளும் இருக்கின்றன. ஷை வித்யாசாலையில் கற்பித்துக்கொடுக்கும் உபாத்தியாயர்கள் எல்லோரும் ஸ்திரீகளாக இருக்கவேண்டுமென ஷை வித்யாசாலையின் விசாரணைதார் பிரயத்தனம் செய்தபோதிலும், உபாத்தினிமார்கள் கிடைப்பது அரிதாயிருக்கிறபடியால், நாலுபேர்கள் தவிர மற்றவர்கள் உபாத்தினிமார்களாக இருக்கக்கூடவில்லை. அந்தத்தினத்தில் நடந்த மஹோத்ஸவத்தில் இரண்டு மாணாக்கர்களுள் நடந்த சமஸ்கிருத சம்பாஷணையானது வியப்புற்றதாயிருந்தது. தவிரவும் பாடல்களும் ஸ்தோத்திரங்களும் சில மாணாக்கர்களால் மிகநன்றாக கானம் செய்யப்பட்டன. இங்கிலீஷிலும் தமிழிலும் சிலமாணாக்கர்கள் மிகவும் நன்றாக சம்பாஷித்தார்கள்.

பிரின்சஸ்காகரீன் அவர்கள் அமேரிக்காவில் விசேஷமாய்ப் பரவியிருக்கும் பெண்கல்வியைப்பற்றியும் இந்தியாவில் அது குறைவாயிருக்கிறதைப் பற்றியும் எடுத்துக்காட்டினார்கள். மிஸ். டிக்ஸன் அம்மாள் அவர்கள் ஆஸ்திரேலியாவில் பெண்களுக்கு கல்விபயிற்பிக்கும் விதத்தைப்பற்றியும் அதனால் அத்தேசத்தில் வசிப்பவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் பிரயோஜனத்தைப்பற்றியும் உபந்நியாஸம் செய்தார்கள். அக்கிராசனாதிபதியரவர்கள் முடிவில், ஸ்ரீ மீனாக்ஷிவித்தியாசாலேயில் மாணாக்கர்களுக்கு ஏற்பட்டிருக்கும் பயிற்சியைப் புகழ்ந்து, இந்தியாவில் பெண்கல்வி குறைவாயிருப்பதினால் ஏற்பட்டிருக்கும் நஷ்டத்தை எடுத்துக்காட்டினார்கள். ஜீவனானவன் அநேக ஜன்மங்கள் எடுக்கிறான். பூர்வஜென்மங்களின் கர்ம பலத்தினால் பின் ஜன்மங்களில் அவனுக்குஏற்படும் பிறப்பும் சகவாசங்களும், செல்வம், செல்வமின்மைமுதலியஸ்திதிகளும்,குணங்கள்முதலியவையும்,உண்டாகின்றன. ஒரு ஜீவனானவன் சில ஜன்மங்களில் புருஷனாகவும் சில ஜன்மங்களில் ஸ்திரீயாகவும் பிறக்கிறான். அப்படியிருக்கையில் ஒரு தேசத்தில் புருஷர்களுக்குமட்டும் கல்வி கற்றுக்கொடுத்து ஞானத்தை உண்டாக்கி ஸ்திரீகளுக்குக் கல்வியைக்கற்றுக்கொடுக்காமல் மூடர்களாகச்செய்விக்கும் பக்ஷத்தில், அந்த தேசத்தில் ஸ்திரீகளாக எந்த ஜீவர்கள் ஜனிப்பார்கள் என்பதை நாம் அறிந்துகொள்ளவேண்டியது முக்கியமானது. புத்திசாலிகளாகவும் ஞானத்தை அடையத்தக்கவர்களாகவும் பிறக்கதக்க ஜீவர்கள் அவர்களுடைய பூர்வகர்ம விசேஷத்தால் ஸ்திரீ ஜன்மத்தை அடையவேண்டியவர்களாக ஏற்படும் பக்ஷத்தில், அவர்கள் இந்தியா தேசத்தில் ஜெனிக்கமாட்டார்கள். எந்த தேசங்களில் கல்வியையும் ஞானத்தையும் அடைய ஸ்திரீகளுக்கு சௌகரியங்கள்ஏற்படுகிறதோ, அந்ததேசங்களில்அவர்கள்பிறக்கதக்க்கவர்களாவார்கள். ஆகையால் இந்த இந்தியா தேசமானது பூர்வகாலங்களில் இருந்த ஸ்திதிக்கு வரவேண்டுமென்றால் இந்தியா தேசத்து ஸ்திரீகள் முன்காலத்தில் புராணங்கள் மூலமாகவும் கதைகள் மூலமாகவும் நாம் தெரிந்துகொள்ளும் ஸ்திரீகளின் தகைமையை அடையவேண்டியது. அதற்கு கல்வி, விவேகம், ஞானம் முக்கியமானவை. அவைகளே இந்த வித்யாசாலே முதலானகல்விச்சாலேகளே விருத்தி செய்யக்கூடியவைகளாக இருக்கின்றன. இப்பேர்ப்பட்ட வித்யாசாலேகள் வருங் காலங்களில் இந்தியாவை உன்னதமான ஸ்திதியில் கொண்டுவரத் தக்கவைகள். உலகத்தில் ஒவ்வொரு மஹானின் சரித்திரத்தையும் நாம் பரிசோதித்துப் பார்க்குங்கால், அவர் அடைந்த மேலான பதவிக்கு அவருடைய, தாய் முக்கியமான காரணமென்று தெரிந்துகொண்டிருக்கிறோம். தாய் விவேகம் இல்லாமற்போனால் மகன் விவேகத்தை அடைவது அரிதாயிருக்கிறது. இக்கல்விச்சாலேயில் இப்பொழுது வெகுமதி பெற்றிருக்கிற பெண்கள் வருங்காலங்களில் தாய்

களாகஆவார்கள். அக்காலங்களில்அவர்களின்குழந்தைகளுக்குநல்ல புத்திமதிகளைச்சொல்லுவதற்கும் நல்லவழிகளில் நிலைபெறப் பயிற்பிப்பிப்பதற்கும் அவர்கள் இக்கல்விச்சாலையில் அடைந்த பயிற்சியானது மிகவும் உபயோகமுள்ளதாகஇருக்கும். இவ்விதமாக பலவிஷயங்களை எடுத்துக்காட்டி பெண்கல்வியினால் எற்படும் பிரயோஜனத்தை வற்புறுத்தி அக்கிராசனாதிபதியவர்கள் உபந்நியாசம் செய்தார்கள். இவ்வருஷத்தில் நடந்த மஹோத்சவமானது சென்றவருஷங்களில் நடந்தவைகளைக்காட்டிலும் மிகவும் விமரிசையாகக் கொண்டாடப்பெற்றது.

துலாராசியில் நாளிது நவம்பர்மீ த்தில், சனி நீங்கலாக 7 கிரகங்கள் கூடுவதால், அதிக மழையாலும் அதிக வெள்ளத்தாலும், சமுத்திரம் பொங்குவதாலும், புசல் அடிப்பதாலும், ஜனங்களுக்கும் பொருள்களுக்கும் சேதம் உண்டாகுமென்று நம்தேசத்து ஜோதிஷ சாஸ்திரிகள் முன்னாலே எச்சரிக்கை செய்துள்ளார். அவர்கள் சொன்னபடியே, அனேக தேசங்களில், ஷை சம்பவங்கள் நேரிட்டு வருகின்றன. பலவாறான நஷ்டங்கள் உண்டாயிருக்கின்றன.

வருகிற டிசம்பர்மீ 26வ முதல் 31வவரை ஆதியாரில் பிரஹ்மஞான ஆசிரமத்தில், இவ்வருஷம், மஹாசபை கூடும். 26வ காலையில் மாதுஸ்ரீ பெஸண்டு அம்மையார் உபந்நியாசம் செய்வார்கள். 27-28-29 30வகளில் ஸ்ரீ மான் ஜி, யஸ், அரண்டேல் என்பார் பிரஹ்மஞான முறையில், ஜனசமுகத்தின் ஐக்கபத்திய உணர்வின் உற்பத்தியையும் வளர்ச்சியையும்பற்றி உபந்நியாசங்கள் செய்வார். 31வ, கல்விஇலாகா சீர்திருத்தம்விஷயமாக ஒருசபை கூடும். மாதுஸ்ரீ அரண்டேல் என்பார், பிரஹ்மஞானமுறையில், ஸ்திரிகளின் கல்விப்பயிர்ச்சியைப்பற்றி உபந்நியாசமும், ஸ்ரீ சஞ்ஜீவிராயர் அவர்கள், சீலம் ஏற்படுவதில், சிங்காரரஸங்களின் உயர்தரபாவங்கள் (Emotions) எவ்வளவுமட்டில் உபயோகமானவைகள் என்பதைப்பற்றிய உபந்நியாசமும் செய்வார்கள்.

அவ்விடத்துப்போகின்றவர்களின் இருப்பிடம், போஜன சௌகரியம் முதலியவைகளுக்கு தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. விசேஷ சௌகரியங்களை நாடுகிறவர்கள் தங்களுடைய வேண்டுகோள்களை நாளிதுமீ 30வக்குள் அந்தந்தஇலாகாஉத்தியோகஸ்தர்களுக்குத்தெரிவித்துக்கொள்ள வேண்டும்.

ஜாகாக்கள் விஷயமாக:—

மகா-ள-ள-ஸ்ரீ

,, ஜி. சுப்பய்யா செட்டியார்

,, B. ரெங்கரெட்டியார்

,, ஜி. நாராயண அய்யர்

சாப்பாடு விஷயமாக:—

,, ஸ்ரீநிவாசராயர்

,, சுப்பிரமணிய அய்யர்

உபந்நியாசங்கள் விஷயமாக:—

ஸ்ரீமாந் வாடியா

நாளிது நவம்பர்மீ 19வ 20வகளில் மதுரை பிரஹ்மஞானக் கிளைச் சங்கங்களின் மஹாசபை இரண்டாம்முறை சிவகங்கையில் கூடும்.

பத்திராதிபர்.